# கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு III

## ஆசிரியர் பனுவல்

**Tamil**
**Standard III**
**Teacher Text**

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

# 1 நானின்றி நீயில்லை

### அலகு அறிமுகம்

இயற்கை என்பது ஆறு, ஏரி, குளம், கிணறு, கடல், காடு, மலைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவை இறைவன் மனிதனுக்கு அளித்த மிகப்பெரிய கொடை ஆகும். இத்தகைய இயற்கையைப் பாதுகாப்பது நமது முக்கிய கடமையாகும். இயற்கை பல்வேறு செல்வங்களை நமக்கு அள்ளித் தருகிறது. ஆனால் தற்போது இயற்கை சார்ந்த காடுகள் அழிக்கப்படுகின்றன. அதனால் மழை குறைந்து பூமி வெப்பமடைகிறது. பல்வேறு இயற்கைப் பேரிடர்களும் அடிக்கடி ஏற்படுகின்றன. மனிதனின் இந்தத் தவறான செயல்களினால் நீர்நிலைகள் வற்றிப் போகின்றன. மேலும் ஆறு, ஏரி, குளம், கிணறு, கடல் போன்ற நீர்நிலைகளை மனிதன் மாசடையச் செய்கின்றான். இவ்வாறு நீர்நிலைகள் மாசடைவதால் உயிரினங்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றன.

ஆறுகள் மலைகளில் உற்பத்தியாகின்றன. பின்பு அவை காடுகளைக் கடந்து சமவெளிகளை வந்தடைகின்றன. அதனால் சமவெளிகள் செழிப்படைகிறது. இறுதியில் கடலில் சென்று கலக்கிறது. கடலிலிருந்து விலைமதிப்பற்ற முத்துகளும், பவளங்களும், பல்வேறு வளங்களும் நமக்குக் கிடைக்கின்றன. அதுமட்டுமல்லாமல் கடல் பல்வேறு உயிரினங்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகிறது. எனவே பூமியிலுள்ள நீர்நிலைகள் அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் உணர வேண்டும். நீர்நிலைகளைப் போலவே வனங்களையும், அங்குள்ள மரங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் இவை அனைத்தும் உயிரினங்களின் வாழ்வாதாரமாகும். இக்கருத்துகளை மாணவர்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் உன்னால் வாழ்கிறோம், ஒப்பில்லாக் காட்சிகள், வளர்ப்போம் வளம் பெறுவோம் எனும் துணை அலகுகளில் இடம்பெற்றுள்ள கவிதைகள், கதைகள், கதைப் பாடல், படக்கதைகள் வாயிலாக மாணவர்கள் கற்றல் இலக்குகளை அடையமுடியும்.

இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளுக்குச் சுமார் 30 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப்பான்மைகள் | | | |
| சுற்றுச்சூழல் | இயற்கையும் ஆறும் | கவிதை<br>கதை | ஆறு இயற்கை எழில் நிறைந்தது<br>ஆறுகளினால் ஏராளம் நன்மைகள் உள்ளன<br>நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும் | • பாடலை வாசித்துக் கருத்தைப் புரிந்து கொள்ளுதல்<br>• மெட்டமைத்துப் பாடுதல்<br>• கதையின் முக்கிய நிகழ்வுகளைச் சொல்லுதல்<br>• வாக்கியத்தில் அமைத்து எழுதுதல்<br>• வினாக்களுக்கு ஏற்ற விடை காணுதல் | இயற்கையை இரசிக்க வேண்டும்<br>இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் | அருஞ்சொற் பொருள்<br>வாக்கியம் அமைத்தல் | கருத்தைக் குறிப்பாக்குதல்<br>கதை நிகழ்வு எழுதுதல்<br>கவிதை முழுமையாக்குதல்<br>கதைப் பாத்திரங்களாக மாற்றி நடித்தல் | மதிப்பீட்டுக் குறிப்பின் அடிப்படையில் மதிப்பிட வேண்டும் தனிநபர்/ குழு/ ஆசிரியர் மதிப்பீடு |
| | கடல் | கவிதை<br>கதை<br>குறிப்பு | கடல் மிகப்பெரிய நீர்நிலையாகும். அதை இரசிக்க வேண்டும்<br>கடற்கரையைப் பலகாரணி களுக்குப் பயன்படுத்து கிறோம்<br>கடலிலிருந்து ஏராளம் வளங்களைப் பெறுகிறோம் | • பாடலை வாசித்துக் கருத்தைக் கூறுதல்<br>• பாடலை மெட்டமைத்து இராகத்துடன் பாடுதல்<br>• கதையைச் சொல்லுதல்<br>• பொருத்தமான வாக்கியம் அமைத்தல்<br>• சரியான விடையை எழுதுதல்<br>• வினாவுக்கு விடை எழுதுதல் | நீர்நிலைகளை மாசுபடுத்தக்கூடாது என்ற மனப்பாங்கு | ஒத்த ஓசையுடைய சொற்கள்<br>பாடல்களைச் சரியான உச்சரிப்புடன் பாடுதல் | கருத்தைக் கூறுதல்<br>இராகத்துடன் பாடுதல்<br>கதையைச் சொல்லுதல்<br>வாக்கியத்தில் அமைத்தல்<br>விடை காணுதல்<br>வாக்கியம் எழுதுதல் | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மரம் | கவிதை<br><br>கதை<br><br>குறிப்பு | உயிரினங்கள் வாழ மரங்கள் இன்றியமை யாதவை<br><br>மரங்களை வெட்டாமல் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்<br><br>மரங்கள் நமக்கு வரங்கள் ஆகும் | • கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுதல்<br>• விருப்பமான வரிகளைக் கூறுதல்<br>• அனுபவங்களைப் பங்கு வைத்தல்<br>• கவிதை வரிகளை முழுமையாக்குதல்<br>• நடித்துக்காட்டுதல் | மரங்கள் இயற்கை கனிந்த வரங்கள்<br><br>மரங்களை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்ற மனப்பாங்கு | தொடர்கள் அமைத்தல்<br><br>தவறுகளின்றி எழுதுதல்<br><br>வினாக்கள் அமைத்தல் | கருத்தைச் சொல்லுதல்<br><br>பிடித்த வரிகளைக் கூறுதல்<br><br>மொழி விளையாட்டில் ஈடுபடுதல்<br><br>அனுபவம் கூறுதல்<br><br>விடை காணுதல்<br><br>நடித்துக் காட்டுதல் | |

## கற்றல் இலக்குகள்

- வாசிப்புப் பகுதியை வாசித்துப் புரிந்துகொள்கிறார்கள்
- மொழி செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்
- பாடலை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்
- கதையின் முக்கிய நிகழ்வுகளை எழுதுகிறார்கள்
- வாக்கியத்தில் அமைத்து எழுதுகிறார்கள்
- வினாக்களை உருவாக்குகிறார்கள்
- தகுந்த உச்சரிப்புடன் வாசிக்கவும் எழுதவும் செய்கிறார்கள்
- பாடலை வாசித்துக் கருத்துகளைக் கூறுகிறார்கள்
- தொடர் அமைக்கிறார்கள்
- கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுகிறார்கள்
- அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்
- அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுகிறார்கள்
- கவிதை வரிகளை முழுமைப்படுத்துகிறார்கள்
- பாடப்பகுதியை நடித்துக் காட்டுகிறார்கள்

## கற்றல் கருவிகள்

- ❖ நீர்நிலைகளுடன் தொடர்புடைய படங்கள்
- ❖ காணொளிக் காட்சிகள்
- ❖ நீர்நிலைகளுடன் தொடர்புடைய பாடல்கள்
- ❖ காடு தொடர்பான கதைகள்
- ❖ காடு தொடர்பான காணொளிக் காட்சிகள்
- ❖ கடல், கடல்வளங்களின் படங்கள்

## நுழைவுச் செயல்பாடு

சுற்றுச்சூழல் தொடர்பான உரையாடலைத் துவக்குதல்

இயற்கையுடன் தொடர்புடைய ஒரு சில வினாக்கள் கேட்டல்

எ.கா. ஆறு உங்களுக்குப் பிடிக்குமா? காரணம் என்ன?

ஒரு சிலருக்குப் பதிலளிக்க வாய்ப்பளிக்க வேண்டும்

ஆறு தொடர்பான காணொளிக் காட்சியைக் காண்போமா? எனக் கேட்டு,

காணொளிக் காட்சியைக் காண்பித்தல்

அதனுடன் தொடர்புடைய சில வினாக்கள் கேட்கலாம்

ஒரு சில மாணவர்களுக்குப் பதிலளிக்க வாய்ப்பளிக்கவும்

கலந்துரையாடிக் கருத்தைக் கூற வாய்ப்பளித்தல்

ஆறு தவழ்ந்து வரும் காட்சியைப் படமாக வரைவோமா? எனக் கேட்டுப் படம் வரையச் செய்யுங்கள்

மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப ஆறு தவழ்ந்து வரும் காட்சியை வரையட்டும்.

- வண்ணம் தீட்டுவதற்கு வாய்ப்பு கொடுங்கள்
  எ.கா. மரங்கள், நீர்நிலைகள்
- சிறப்பாக வரைந்து வண்ணம் தீட்டிய குழந்தைகளைப் பாராட்டுங்கள்
- வகுப்பில் பின்தங்கிய மாணவர்களுக்குப் படம் வரைந்து வண்ணம் தீட்ட உதவ வேண்டும்
- மாணவர்கள் வரைந்த படங்களைச் சேகரித்துத் தொகுப்பாக்குங்கள்
- ஆறு கடந்து வரும் பாதையின் படம் "நானின்றி நீயில்லை" எனும் தலைப்பில் பாடப்பகுதியின் முதல் அலகில் தரப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள கருத்துப் படத்தைப் பார்த்து உரையாடல் நடத்துங்கள்
- உன்னால் வாழ்கிறோம் எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ள "பார்த்து வந்தேன்" எனும் கவிதையை அறிமுகம் செய்தல்.

# பார்த்து வந்தேன்

## செயல்பாடுகள்

**கவிதையை இராகத்துடன் பாடுங்கள்.**

- பார்த்து வந்தேன் கவிதையை மௌனமாக வாசித்துப்பாருங்கள் எனக்கூறி வாசிக்கத் தூண்டுதல்
- ஓரிருமுறை சத்தமாக வாசித்தல்
- கவிதைக்கு மெட்டமைக்கச் செய்தல்
- ஒரு சில குழந்தைகளுக்குப் பாடுவதற்கு வாய்ப்பு கொடுத்தல் .
- குழு தந்திரங்களின் அடிப்படையில் குழுவாக்கிப் பாடுவதற்கு வாய்ப்பளித்தல்
- ஒரு குழு பாடும்போது பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- ஆசிரியர் பாடிக்காட்டுதல்
- குழுவினர் மேம்படுத்தி மெட்டமைத்துப் பாடுவதற்கு வாய்ப்பளித்தல் .
- பாடும்போது குழு/தனிநபர்/ஆசிரியர் மதிப்பீடு செய்தல்.
- பாடலைப் பல்வேறு மெட்டுகளில் மெட்டமைத்துப் பாடுவதற்கு வாய்ப்பளித்தல்
- ஆசிரியர் புதிய மெட்டமைத்துப் பாடிக் காண்பித்தல்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- தெளிவான உச்சரிப்புடன் பாடினார்கள்.
- குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடினார்கள்.
- மிதமான அங்க அசைவுடன் பாடினார்கள்.
- பொருத்தமான மெட்டுடன் பாடினார்கள்.
- இராக தாளத்துடன் பாடினார்கள்.

**பாடலை வாசித்துப் பிடித்த வரிகளைக் கூறுங்கள்**

- குழந்தைகள் தனிநபராகப் பாடலை வாசித்தல்
- ஓரிரு முறை வாசிக்க வாய்ப்பளித்தல்
- கருத்துகளை ஆசிரியர் கூறுதல்
- குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த வரிகளைக் கண்டடைதல்.
- ஆசிரியர் உதவி செய்தல்

- பிடித்த வரிகளை வகுப்பில் கூறுதல்
- பிடித்ததற்கான காரணத்தை ஆசிரியர் வினவுதல்
- குழந்தைகள் காரணத்தைக் கூறுதல்
- பிற குழந்தைகள் மதிப்பிடல்
- அனைத்துக் குழந்தைகளும் பங்கு பெறுகிறார்கள் என்பதை உறுதி செய்தல்
- கவிதை வரிகளை மீண்டும் மீண்டும் வாசிப்பதற்கு வாய்ப்பு கொடுத்தல்
- பின்தங்கிய மாணவர்களுக்கு வாசிப்பின்போது உதவுதல்

**வாசிப்பு**

- புத்தக வாசிப்பு
- கணினித் திரையில் பாடலைக் காட்சிப்படுத்தி வாசிக்க வைத்தல்
- சார்ட்டில் எழுதி வாசிக்கச் செய்தல்

எ.கா. கன்னற் காட்டைக் கண்டாயோ?
காலாற் கடந்து சென்றாயோ
மலையிலிருந்து பிறந்துவரும் ஆறே நீ கரும்புக் காட்டைப் பார்த்து வந்தாயோ? அவ்வழியே கால்களால் நடந்து சென்றாயோ?

மேலும் ஒரு சில மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கலாமல்லவா?

சிறப்பாகக் கூறியவர்களைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- தெளிவான கருத்துகளைக் கூறியுள்ளனர்.
- பிழையில்லாமல் வாசித்தார்கள்.
- விருப்பமான வரிகளைக் கண்டுபிடித்துக் கூறினார்கள்

**முதல் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.**

- குழந்தைகளை இருவர் அடங்கிய குழுவாக்குதல்
- குழுக்கள் பாடல் பகுதியை நன்கு வாசித்தல்
- பாடப்பகுதியில் முதல் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுதல்.

- எழுதியவற்றை வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- குழுக்கள் மேம்படுத்திக் கூறுதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- குழந்தைகள் ஒப்பீடு செய்தல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

எ.கா.

குலை குலை, கற்கள், கழனி
குளிர் மலர் தடுத்த, தமிழர்
உன்னால்,
உன்னை.

**இரண்டாம் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.**

பாடலை வாசித்து இரண்டாம் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுதல்.

எ.கா:

மலை, கலை,
ஏழை, தாழை
தடுத்த, கொடுத்த
உன்னால், உன்னை

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- இரண்டாம் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்துள்ளனர்.
- தெளிவாக எழுதியுள்ளனர்.

**ஆறு கடந்து வந்த பாதையில் பார்த்தவற்றை எழுதுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல் (ஆறு, குளம், கடல், காடு)
- குழந்தைகள் பாடப்பகுதியை நன்கு வாசித்தல்
- மீண்டும் மீண்டும் வாசிக்க வாய்ப்பளித்தல்

- பாடலில் ஆறு பார்த்து வந்தவற்றைக் கண்டுபிடிக்கச் செய்தல்
- கண்டுபிடித்தவற்றைக் குழுவில் கலந்துரையாடிக் குறிப்பேட்டில் எழுதுதல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- குழுக்கள் வகுப்பில் வெளியிடல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்து மேம்படுத்துதல்
- குழுக்கள் கூறியவற்றை ஆசிரியர் சார்ட் செய்தல்
- குழுக்கள் சார்ட்டில் எழுதியவற்றை வாசித்தல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- குழந்தைகள் ஒப்பீடு செய்து மேம்படுத்திக் குறிப்பேட்டில் எழுதுதல்

எ.கா. மலையின் இடுக்கைப் பார்த்து வந்தது

- பொற்கொன்றைக் குளிர்மலர்
- பெண்மானின் காடு
- குலை குலையாகச் செவ்வாழை
- நெல்வயல்
- முக்கனி
- திருக்குளம்
- கரும்புக்காடு
- கற்கள்
- மக்கள் வாழாத பாலைநிலம்
- தாழைப் போர்த்த கடல்

## மதிப்பீட்டுக் குறிப்புகள்

- தெளிவாக வாசித்துள்ளனர்.
- பிழையில்லாமல் எழுதியுள்ளனர்.
- ஆறு பார்த்தவற்றைக் கண்டுபிடித்து எழுதியுள்ளனர்.

## சரியானவற்றை எடுத்து எழுதுங்கள்

இந்த மொழிச் செயல்பாடு மாணவர்களிடையே ஏற்படும் எழுத்துப் பிழைகளைச் சரிசெய்வதற்காக கொடுக்கப்பட்டுள்ளது.

- குழந்தைகள் தனித்தனியே செய்தல்
- குழந்தைகள் செயல்பாடு பகுதியை நன்கு வாசித்தல்
- அடைப்புக்குள் உள்ள எழுத்துகளைத் தகுந்த உச்சரிப்புடன் வாசித்தல்
- விடுபட்ட இடத்தில் பொருத்தமான எழுத்தை எழுதுதல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- எழுதிய பின்பு வார்த்தையை வாசித்தல்
- செயல்பாடு பகுதியை நிறைவு செய்த பின்பு வகுப்பில் கூறுதல்
- பிற குழந்தைகள் மதிப்பீடு செய்தல்
- மேம்படுத்தி எழுதுதல்
- எழுதியவற்றை மீண்டும் வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- குழந்தைகள் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்

எ.கா: நான் மலைகளில், பாறைகளில் குதித்து விளையாடி அருவியாக விழுந்து தரையில் ஓடுவது கண் கொள்ளாக் காட்சியாகும்.

### தொடர் செயல்பாடு

- கு_____ (லை/ளை) கு___(லை/ளை) யாகப் பொ______ (ற்/ர்) கொ___(ன்/ண் ) றைக் குளிர் ம___(ல/ழ)ர் கொ _____(ண்/ன்)டு வந்தாயோ?
- க __(ன் /ண் ) ணற் காட்டைக் க___(ன்/ண்) டாயோ?
- காலா_____(ர்/ற்) கடந்து செ_____(ண்/ன் ) றாயோ?

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- சரியான எழுத்தை அடையாளம் கண்டனர்.
- சொல் சரியாக எழுதியுள்ளனர்.
- சரியான உச்சரிப்புடன் வாசித்தனர்.

- **குழந்தைகளுக்கு வாசிப்புச் செயல்பாடாகக் கொடுங்கள்**

**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிஞர் வாணிதாசன் |
| இயற்பெயர் | : | எத்திராசலு |
| புனைப்பெயர் | : | ரமி |
| பிறப்பு | : | 22.07.1915 |
| இடம் | : | வில்லியனூர், புதுச்சேரி |
| தந்தை | : | அரங்க திருக்காமு |
| தாய் | : | துளசியம்மாள் |
| இவர் எழுதிய நூல்கள் | : | இரவு வரவில்லை, இன்ப இலக்கியம், இனிக்கும் பாட்டு, எழில் விருத்தம், ......... |
| இவர் பெற்ற விருது | : | செவாலியர் விருது |
| சிறப்புப் பட்டங்கள் | : | 'கவிஞரேறு', 'பாவலர் மணி' |
| மறைவு | : | 07.08.1974 |

## கிணற்றுக்குள் வைர மோதிரம்

### செயல்பாடுகள்

- ஆசிரியர் கிணற்றுக்குள் வைர மோதிரம் என்ற கதைப்பகுதியை வாசித்துக் கதையைக் கூறுதல்
- குழந்தைகளை மௌனமாக வாசிக்க வைத்தல்
- சத்தமாக வாசிக்கச் செய்தல்
- மாணவர்கள் வாசித்துப் புரிந்த கதையைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தல்
- சிறப்பாகக் கூறிய குழந்தையைப் பாராட்டுதல்
- வாசிப்புத் தந்திரங்களைப் பயன்படுத்தி வாசிப்பதற்கு வாய்ப்பு கொடுத்தல்
- பாடப்பகுதியில் ஒரு பத்தியில் இடம்பெற்றுள்ள ஒரு குறிப்பிட்ட சொல்லைக் கொடுத்து அச்சொல் எந்த வரிசையில் இடம்பெற்றுள்ளது எனக் கண்டுபிடிக்கக் கூறுதல்
- பாடப்பகுதியில் அகர வரிசையில் இடம்பெற்றுள்ள சொற்களைக் கண்டுபிடிக்கச் செய்தல்.

  எ.கா. கடுமையாக, கிணறு, கோடைக்காலம்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- தெளிவான உச்சரிப்புடன் வாசித்துள்ளனர்.
- கருத்துத் தெளிவுடன் கூறியுள்ளனர்.
- நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்தி வாசித்தார்கள்.
- ஏற்ற இறக்கத்துடன் (நெடில்/குறில்) வாசித்தார்கள்.

**பீர்பால் வைரமோதிரத்தை எவ்வாறு வெளியே எடுத்தார் என்பதைப் பாடப் பகுதியை வாசித்துக் கூறுங்கள்.**

ஒவ்வொரு மாணவனும் பாடப்பகுதியை மௌனமாக வாசித்தல் (பக்கம், 12–இல் பீர்பால் கிணற்றுக்குள் கிடந்த............)

- ஓரிருமுறை வாசிக்க வாய்ப்பளித்தல்
- வைர மோதிரத்தை வெளியே எடுத்த முறையை வகுப்பில் கூறுதல்
- பிற குழந்தைகள் தாங்கள் கண்டறிந்தவற்றைக் கூறுதல்
- ஆசிரியர் ஈடுபட்டு உதவி செய்தல்
- குழந்தைகள் மேம்படுத்திக் கூறுதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- ஒரு சில மாணவர்களுக்கு வாசிக்க வாய்ப்பு கொடுத்தல்
- சிறப்பாக வாசித்த மாணவனைப் பாராட்டுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கருத்துத் தெளிவுடன் வாசித்தனர்.
- சரியான உச்சரிப்புடன் வாசித்தனர்.
- வைரமோதிரம் வெளியே எடுத்த நிகழ்வைச் சரியாகக் கூறினர்.

**ஆறுகள், கிணறுகள் வற்றிப் போவதால் ஏற்படும் தீமைகளைக் கலந்துரையாடிக் கூறுங்கள்.**

- ஆறுகள், கிணறுகள் வற்றிப் போவதனால் ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பான காணொளிக் காட்சிகளைக் காண்பித்தல். பார்த்த காட்சிகளைக் குறித்துக் கலந்துரையாடுதல்

- பாடப்பகுதியை ஒருமுறை வாசிப்பதற்கு வாய்ப்பளித்தல்
- குழு தந்திரங்களின் அடிப்படையில் மாணவர்களைக் குழுவாக்குதல்
- குழுவில் ஒருமுறை பாடப்பகுதியை வாசிக்கட்டும். கலந்துரையாடல் நடத்திக் குறிப்புகளை வெளியிட வாய்ப்பளித்தல்
- பிற குழுக்கள் மதிப்பிட்டு மேம்படுத்துதல்
- ஆசிரியர் தனது குறிப்புகளைச் சார்ட்டில் எழுதி வகுப்பில் வெளியிடுதல்
- மாணவர்கள் குறிப்புகளை மேம்படுத்துதல்
- மேம்படுத்திய குறிப்புகளை மாணவர்கள் வெளியிட வாய்ப்பளித்தல்
- வாசிப்பின்போது, வகுப்பறையில் பின்தங்கிய மாணவர்களுக்குத் தேவையான பின்னூட்டம் அளித்தல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கருத்துகள் கோர்வையாக உள்ளன.
- சரியான வாக்கிய அமைப்பு உள்ளது
- கருத்துகள் தொடர்புடன் அமைந்துள்ளன.

**கீழ்வரும் சொற்களுக்கு இரு பொருள் எழுதுங்கள்**

இருபொருள் தரக்கூடிய சொற்களைக் கண்டறிந்து எழுதுதல்

- குழந்தைகள் செயல்பாட்டுப் பகுதியை வாசித்தல்
- அகராதியைப் பார்க்க வாய்ப்பளித்தல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. : | ஆறு : | 1. நதி | நூல் : | 1. தைக்கும் நூல் |
| | | 2. எண் | | 2. புத்தகம் |
| | கல் : | 1. பாறைக்கல் | மாலை : | 1. மாலைநேரம் |
| | | 2. படி | | 2. பூமாலை |

# கடலின் ஆழம்

## செயல்பாடுகள்

### பாடலின் கருத்தைக் கூறுங்கள்

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுக்கள் பாடலை நன்கு வாசித்தல்
- மீண்டும் மீண்டும் வாசிக்க வாய்ப்பளித்தல்
- பாடலை ஒவ்வொரு பத்தியாக வாசித்துக் கருத்தைக் கூறுதல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- பிற குழுக்கள் மதிப்பிட்டு மேம்படுத்துதல்
- பாடலின் இறுதியில் மொத்த கருத்தையும் கூறுதல்
- ஆசிரியர் ஒருங்கிணைத்தல்
- ஒவ்வொரு குழுவும் மொத்த கருத்தையும் கூற வாய்ப்பளியுங்கள்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- குழந்தைகள் மேம்படுத்தித் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பாடல் தெளிவுடன் வாசித்தனர்
- கருத்துகளைக் கோர்வையுடன் வெளியிட்டனர்.
- குழுவில் அனைவரின் பங்களிப்பும் இருந்தன.

### கவிதையை இராகத்துடன் பாடுங்கள்

பாடலை ஒவ்வொருவரும் மௌனமாக ஓரிருமுறை வாசித்தல்.

- பாடலுக்கு மெட்டமைக்கச் செய்தல்
- வகுப்பில் வெளியிடுதல்
- குழுக்களாகப் பிரித்தல்
- குழுக்கள் இராக தாளத்தோடு பாடுதல்
- பிற குழுக்கள் மேம்படுத்திப் பாடுதல்
- அழகாகப் பாடிய குழுவைப் பாராட்டுதல்
- ஆசிரியர் புதிய மெட்டமைத்து, உடல் அசைவோடு பாடிக்காட்டுதல்

மாணவர்கள் மேம்படுத்திக் கொள்ளட்டும்

### மதிப்பீட்டுக் குறிப்பு

- நல்ல குரல் வளத்துடன் பாடினர்.
- தெளிவான உச்சரிப்புடன் பாடினர்.
- குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடினர்.
- அங்க அசைவுடன் பாடினர்.

**பாடலில் இடம்பெற்ற கதையைச் சொல்லுங்கள்**

- பாடலை ஓரிருமுறை வாசிப்பதற்கு வாய்ப்பளித்தல்
- பாடலில் இடம்பெற்ற கதையைக் குழந்தைகள் கூற வாய்ப்பளித்தல்
- ஆசிரியர் கதையைக் கூறுதல்
- குழந்தைகள் மேம்படுத்திக் கூற வாய்ப்பளித்தல்
- சிறப்பாக கூறிய மாணவனைப் பாராட்டுதல்
- வகுப்பில் பின்தங்கிய மாணவனுக்குக் கதையைக் கூற உதவுதல்

### மதிப்பீட்டுக் குறிப்பு

- கருத்துத் தெளிவுடன் வாசித்தனர்.
- கதையைக் கண்டறிந்து கூறினர்.
- குரல் ஏற்றத்தாழ்வு, உடல் அசைவுடன் கதையைக் கூறினர்.

**கீழே கொடுத்துள்ள படத்திற்குப் பொருத்தமான வாக்கியங்களை எழுதுங்கள்.**

- குழந்தைகள் செயல்பாட்டுப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுக் கவனித்தல்
- படங்களைக் குறித்து வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- பிற குழுக்கள் மேம்படுத்திக் கூறுதல்
- பொருத்தமான வாக்கியங்களைத் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்

எ.கா:

- கடலில் கப்பல் மிதந்து செல்கிறது
- மீனவர் கடலில் மீன் பிடிக்கிறார்

- கடற்கரையில் தென்னை மரம் நிற்கிறது
- கட்டுமரத்தைக்  கடலினுள் செலுத்துகின்றனர்

## பாடும் இறகு

### செயல்பாடுகள்

**பாடப்பகுதியை நன்கு வாசியுங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.**

வாசிப்புச்  செயல்வரிசையைப் பயன்படுத்துங்கள்.

- ஒவ்வொரு மாணவனும் கதைப்பகுதியை ஓரிருமுறை வாசித்தல்.
- கதையில் இடம்பெற்றுள்ள கருத்துகளைக் கூறுவதற்கு ஒரு சிலருக்கு வாய்ப்பு அளித்தல்.
- அனைத்து மாணவர்களும் வாசிப்பதை உறுதிப்படுத்துவீர்களல்லவா?
- கருத்துகளை ஆசிரியர் ஒருங்கிணைத்தல்.
- ஆசிரியர் தனது கருத்தைக் கூறுதல்.
- மாணவர்கள் மேம்படுத்திக் கூறுதல்.
- பின்தங்கிய மாணவர்களுக்கு வாசிப்பின்போது தேவையான பின்னூட்டம் அளித்தல்.

#### கடலோரம்

கடலோரத்தில் சென்றிடுவோம்
    கடலின் அழகைக் கண்டிடுவோம்
கடலின் அலைகள் திரண்டெழுந்து
    கரையை நோக்கி விரைந்திடுமாம்!

நீலக்கடலின் நடுவினிலே
    நெடியக் கப்பல் சென்றிடுமாம்!
வாலைத் தூக்கி  மீன்வகைகள்
    வரியைத் துள்ளிக் களித்திடுமாம்!

மீனைப் பிடிக்கப் பரதவரும்
    மிகவே செல்வர் ஓடமதில்!
வானை முட்டும் கடல் விளிம்பு
    வரிக்கோ திட்டுக் காட்டுமே!

மணலின் மேலே இலநண்டு
    மண்ணில் ஒளிந்தே விளையாடும்
இனிதாய் எல்லாம் காண்போமே!
    இருட்டும் முன்வீ  டடைவோமே!

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கருத்துத் தெளிவுடன் வாசித்தனர்.
- கருத்துகளைச் சரியாகக் கூறுகின்றனர்.

**இந்தப் பாடப்பகுதியில் உங்களுக்கு மிகவும் பிடித்த பகுதியைச் சத்தமாக வாசியுங்கள்.**

- மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த பாடப்பகுதியைச் சத்தமாக வாசித்தல்.
- காரணத்தை வெளியிட வாய்ப்பு கொடுத்தல்
- வாசிப்பு உத்திகளைக் கையாளுதல்
- பின்தங்கிய மாணவர்களுக்கு வாசிப்பில் உதவுதல்
- வாசிப்பின்போது பிற மாணவர்களும், ஆசிரியரும் மதிப்பீடு செய்தல்
- சிறப்பாக வாசித்த மாணவனைப் பாராட்டுதல்
- அனைத்து மாணவர்களும் வாசித்தனர் என்பதை உறுதி செய்தல்

**பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து எடுத்து எழுதுங்கள்.**

- பாடப்பகுதியை வாசித்துப் பொருத்தமான சொற்களைக் கண்டுபிடித்தல்
- குழந்தைகள் செயல்பாட்டுப் பகுதியை வாசித்தல்
- அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல்.
- தொடரை மீண்டும் வாசித்தல்
- கோடிட்ட இடத்தில் அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தேர்வு செய்து எழுதுதல்
- மீண்டும் தொடரை வாசித்துப் பொருத்தமான சொல் எழுதப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- குழந்தைகள் வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- பிற குழந்தைகள் மேம்படுத்தி குறிப்பேட்டில் எழுதுதல்

கடற்பறவை இழந்தது <u>இறகு</u>
கடற்பறவை ஆவலுடன் <u>பறந்தது</u>
கடற்பறவை <u>தாழ்ந்து</u> பறந்தது
இறகு ஒன்று <u>கீழே</u> விழுந்தது
சிறுவன் கடற்கரையில் <u>ஓடினான்</u>

## கன்னிக்கடல்

### செயல்பாடுகள்

**கவிதையை இராகத்துடன் பாடுங்கள்**

கவிதையைப் பாடுதல் என்ற செயல்பாட்டு வரிசையைக் கடைப்பிடிக்கவும்.

**கடலிலிருந்து என்னென்ன கிடைக்கின்றன?**

*ஆசிரியர் கடலைப் பற்றிய உரையாடலைத் துவக்குதல்

*ஒருசில வினாக்கள் கேட்டல்

எ .கா. கடற்கரைக்குச் சென்ற அனுபவம் உள்ளதா?

கடலின் நிறம் என்ன?

கடல் நீரின் சுவை எவ்வாறு இருக்கும்?

- ஒரு சில மாணவர்கள் பதில் கூற வாய்ப்பளித்தல்
- கடலைப் பார்த்த மாணவர்களின் அனுபவத்தைக் கூற வாய்ப்பளித்தல்
- ஆசிரியர் கடல் மற்றும் கடல் வளங்கள் தொடர்பான காணொளிக் காட்சியைக் காண்பித்தல்
- ஒரு சில வினாக்களைக் கேட்டல்
- பின்தங்கிய மாணவர்களிடம் கேட்க வேண்டியவை........................
    - படத்தில் என்ன பார்க்கிறாய்?
    - இப்போது கடலின் நிறத்தைக் கூற முடியுமா?
    - வேறு என்னென்ன பார்க்கிறாய்?
    - கடற்கரையில் காண்பது என்ன?
- கடலிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் குறித்துக் கேட்டல்
- மாணவர்கள் கூறுபவற்றைச் சார்ட்/கரும்பலகையில் ஆசிரியர் பதிவு செய்தல்
- ஆசிரியர் திரட்டிய தகவல்களையும் பதிவு செய்தல்.

மாணவர்கள் தங்களது குறிப்பேட்டில் பதிவு செய்தல்.

- மீன்
- பவளம்
- உப்பு
- கடற்குச்சு
- சிப்பி
- கடற்பாசி
- முத்து
- சங்கு
- எண்ணெய் வளம்

**பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடற்கரைக் காட்சிகளை எழுதுங்கள்**

- மாணவர்கள் கவிதையை மௌனமாக வாசித்தல்.
- ஆசிரியர் ஓரிருமுறை உரக்க வாசித்துக் காண்பித்தல்.
- குழு தந்திரங்களின் அடிப்படையில் குழுவாக்குதல்.
- கவிதையை வாசித்துக் குழந்தைகள் கடற்கரைக் காட்சியைக் கண்டுபிடித்து எழுதுதல்.
- குழுவினர் வெளியிட வாய்ப்பளித்தல்.
- ஆசிரியர்  அவற்றைச் சார்ட்/கரும்பலகையில் பதிவு செய்தல்.
- ஆசிரியர் எழுதிய குறிப்பை வகுப்பில் வெளியிடுதல்.

  எ.கா : கடற்கரைக் காட்சிகள்
  - மின்னும் மணற்பரப்பு
  - உயர்ந்த ஆலயம்
  - மன்னவர் மாளிகை
  - உயர்ந்த சுவர்
  - சிந்தூரக் களம் உடைந்ததுபோன்ற காட்சி
- மாணவர்கள் மேம்படுத்தி எழுதுதல்
- தங்களது குறிப்பேட்டில் பதிவு  செய்தல்
- தங்களது படைப்புத்  தொகுப்பில் சேர்த்தல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பிழையில்லாமல் எழுதியுள்ளனர்.
- கடற்கரைக் காட்சிகளை எழுதியுள்ளனர்
- குழுவில் அனைவரும் பங்குபெற்றுள்ளனர்

## எங்கும் பசுமை

### செயல்பாடுகள்

**பாடலின் கருத்தைச் சொல்லுங்கள்**

- ஒவ்வொருவரும் பாடப்பகுதியை ஓரிருமுறை மௌனமாக வாசித்தல்
- மாணவர்களைக் குழுவாக்குதல்
- குழுவில் ஓரிருமுறை வாசித்துக் கருத்தைக் கண்டுபிடிக்க வாய்ப்பளித்தல்
- குழுவினர் வெளியிடுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்து மேம்படுத்துதல்
- ஆசிரியர் சார்ட்/கரும்பலகையில் பதிவுசெய்தல்
- ஆசிரியர் தனது கருத்தைக் கூறுதல்
- அட்டையில் தொங்கவிட்டுக் காண்பித்தல்
- குழுவில் மேம்படுத்தல்
- மாணவர்கள் தங்களது குறிப்பேட்டில் பதிவு செய்தல்
- பின்தங்கிய மாணவர்களுக்குக் குறிப்பேட்டில் பதிவு செய்ய உதவுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- கருத்தைப் புரிந்து வாசித்தனர்
- தெளிவான கருத்துகளைக் கூறினர்

**கவிதையில் முதல் எழுத்து ஒரே போன்று வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.**

- மாணவர்கள் கவிதையை ஓரிருமுறை வாசித்தல்
- முதல் எழுத்து ஒன்றிவரும் சொற்களைக் கண்டுபிடிக்க வாய்ப்பளித்தல்
- குழுவாக்குதல்
- குழுவினர் உதவியுடன் பின்தங்கிய மாணவர்களுக்குக் கண்டுபிடிக்க வாய்ப்பளித்தல்
- குழுவில் ஒருவர் வெளியிடுதல்
- ஆசிரியர் கரும்பலகை/ சார்ட்டில் பதிவு செய்தல்

எ.கா: வீசும், வீட்டை
நிழலை, நிறைய
மழையும், மண்
தழைத்து, தன்னை

- மாணவர்கள் தங்களது குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ளுதல்

**பாடலில் உங்களை மிகவும் கவர்ந்த நான்கு வரிகளைக் கூறுங்கள்.**

பார்த்து வந்தேன் பாடப்பகுதியில் உள்ள பாடலை வாசித்துப் பிடித்த செயல்வரிசையைப் பின்பற்றுங்கள். வரிகளைக் கூறுங்கள்

### சொல்லி மகிழ்வோம்

**செயல்பாடுகள்**

1. ஓடற நரியில் ஒரு நரி கிழநரி
   கிழநரி முதுகில ஒரு பிடி நரமுடி
2. சரக்கு ரயிலைக் குறுக்கு வழியில் நிறுத்த
   நினைத்த முறுக்கு மைனர் சறுக்கி விழுந்தும்
   முறுக்கு மீசை இரங்கல

- இதனைச் சார்ட்டில் எழுதிக்கொள்ளவும்
- ஒரு மொழி விளையாட்டு விளையாடலாமா? எனக் கேட்டுச் சார்டைக் காண்பித்தல்
- சார்ட்டில் எழுதப்பட்ட வாக்கியங்களை ஒருமுறை மௌனமாக வாசித்தல்
- பின்பு ஒவ்வொரு மாணவனும் உரக்க வாசிப்பதற்கு வாய்ப்பளித்தல்
- மாணவர்கள் ஒவ்வொருவரும் சரியான உச்சரிப்புடனும் குரல் ஏற்றத் தாழ்வுடனும் வாசிக்கிறார்களா என்பதைக் கவனித்தல்
- மீண்டும் மீண்டும் உச்சரித்துப் பழக வாய்ப்பளித்தல்.
- கூடுதல் நாபிறழ் பயிற்சியளிப்பதற்கு உதவுதல்
  எ.கா. ஏழைக் கிழவன் வாழைப்பழத் தோல் வழுக்கிக் கீழே விழுந்தான்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- சரியான உச்சரிப்புடன் வாசித்தனர்.
- தவறில்லாமல் சொல்லிப் பழகினர்.

## மரம்வெட்டி மாடசாமி

### செயல்பாடுகள்

**கதையை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்**

- கதையைத் தனிநபராக மௌனமாக வாசிக்கச் செய்தல்
- ஒரு சிலருக்கு உரக்க வாசிக்க வாய்ப்பளித்தல்
- மாணவர்களைக் குழுவாக்குதல்
- பாடலை வாசித்துக் கருத்துகளைக் கண்டடைதல்
- குழுவில் கலந்துரையாடிக் கருத்துகளை எழுதி வெளியிடுதல்
- ஒவ்வொரு குழுவிற்கும் வாய்ப்பளித்தல்
- ஆசிரியர் கருத்தைச் சார்ட்டில் வெளியிடுதல்
- ஒவ்வொருவரும் குழுவில் மேம்படுத்துதல்
- கருத்துகளைத் தங்களது பதிவேட்டில் எழுதுதல்

**நீங்கள் மழையில் சிக்கிய நிகழ்வைச் சொல்லுங்கள்**

- ஒவ்வொரு மாணவர்களும், மழையில் சிக்கிய அனுபவத்தைக் கூறுதல்
- ஆசிரியர் ஒரு நிகழ்வைக் கூறி / ICT வாயிலாகக் காண்பித்தல்
- குழுவாக்குதல்
- ICT காட்சி குறித்துக் கலந்துரையாடுதல்
- மழைக்கால அனுபவத்தை எழுதுதல்
- குழுவில் வெளியிடுதல்

**ஆசிரியர்/குழுக்கள் மதிப்பீடு செய்தல்**

- ஆசிரியர் மழைக்கால நிகழ்வைக் குறிப்பாக எழுதி வெளியிடுதல்
- மாணவர்கள் தங்களது குறிப்புகளை மேம்படுத்திக் குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ளுதல்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- மாணவர்கள் அனுபவத்தைத் தெளிவாகக் கூறினர்
- கலந்துரையாடலில் அனைவரும் பங்குபெற்றனர்

**கதையில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களை எழுதுங்கள்.**

- கதையை ஒரிருமுறை வாசித்தல்

- கதையில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்களைக் கண்டறிதல்.
- குறிப்பேட்டில் குறிக்கச் செய்தல்.
- ஓரிரு நபர்களை வெளியிடும்படிக் கூறுதல்.
- அனைத்துக் கதாபாத்திரங்களின் பெயர்களையும் எழுதிய மாணவர்களைப் பாராட்டுதல்.

எ.கா: மரம்வெட்டி மாடசாமி
மாடசாமியின் மகன்
மாணிக்கத்தின் நண்பர்கள்
மாணிக்கத்தின் அம்மா
ஆசிரியர்கள்
பள்ளி மாணவர்கள்

**'மரம் வெட்டக்கூடாது' என மாணிக்கம் கூறக் காரணம் என்ன? எழுதுங்கள்.**

- மாணவர்கள் கதையை வாசித்துக் காரணத்தைத் தனிநபராக எழுதுதல்
- குழுவாக்குதல்
- குழுவில் வாசித்துக் காரணத்தைக் கண்டறிதல்
- வெளியிடுதல்
- ஆசிரியர்/குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- பிற குழுக்கள் மேம்படுத்தி எழுதுதல்
- சரியாக வெளியிட்ட குழுவைப் பாராட்டுதல்
- பின்தங்கிய மாணவர்களுக்கு வாசிப்பின்போது ஆசிரியர் உதவுதல்
- பின்தங்கிய மாணவர்கள் ஆசிரியரின் குறிப்பைப் பார்த்து மேம்படுத்தி எழுதுதல்.

எ.கா: மாடசாமி மரங்களை வெட்டுவது மாணிக்கத்திற்கு வருத்தமாக இருக்கும். அவர், தேவைக்கு அதிகமாக மரங்களை வெட்டுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. மரங்கள் இருந்தால்தான் மழை பெய்யும் என்பார் . அந்த மரம் தான் என்னைக் காப்பாற்றியது. இனி மேலாவது மரங்களை வெட்டாதீர்கள் என்றான்.

**மாடசாமியின் மன மாற்றத்திற்கு காரணமாக இருந்த நிகழ்வை எழுதுங்கள்.**

- மாணவர்கள் கதைப் பகுதியை நன்கு வாசித்தல்
- குழுவாக்குதல்
- குழுவில் வாசித்துக் காரணத்தைக் கண்டறிதல்

- எழுதி வெளியிட வாய்ப்பளித்தல்
- ஆசிரியர் தனது மாதிரியை வெளியிடுதல்
- மாணவர்கள் மேம்படுத்தி பதிவேட்டில் பதிவு செய்தல்

எ.கா: மாடசாமி வெட்டாமல் விட்டிருந்த மரம்தான் மாணிக்கத்தின் உயிரைக் காப்பாற்றியது. இதை உணர்ந்த அவர் மரங்களை வெட்டாமல் வயலில் வேலை செய்துவருகிறார்.

## மரங்கள் வரங்கள்

### செயல்பாடுகள்

**படக்கதையை வாசியுங்கள் கருத்தைக் கூறுங்கள்**

- மாணவர்கள் படக்கதையை வாசித்தல்
- குழுவாக்குதல்
- குழுவில் வாசித்தல்
- கலந்துரையாடுதல்
- ஒரு சில வினாக்கள் கேட்டல்

எ.கா: பறவைகளுக்கு உணவும் வீடும் தருகிறேன் என்று கூறிய மரம் எது? காரணம் கூறுக

- அதிக மருத்துவ குணம் உள்ளது எனக் கூறிய மரம் எது? காரணம் கூறுக
- இளநீர், தேங்காய் போன்றவை எந்த மரத்திலிருந்து கிடைக்கிறது?
- ஒருசில மாணவர்கள் பதிலளித்தல்
- வாசிப்புப் பகுதியின் கருத்துகளைக் கேட்டல்
- குழுவாக  வெளியிடுதல்
- சிறப்பாக கருத்துக்  கூறியவர்களைப் பாராட்டுதல்
- கருத்துகளைத் தங்களது குறிப்பேட்டில் பதிவு செய்து கொள்ளுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- படக்கதையை நன்கு வாசித்தனர்
- கருத்துகளைத் தெளிவாக வெளியிட்டனர்
- கலந்துரையாடலில் பங்குபெற்று கருத்துகளைக் கூறினர்

**மரம் தன் சிறப்புகளைக் கூறுவது போல் சொல்லுங்கள். எழுதுங்கள்.**

- மாணவர்கள் கதைப்பகுதியை வாசித்தல்
- நான்கு மரங்களின் அடிப்படையில் குழுவாக்குதல்
- கலந்துரையாடிக் கருத்துகளைப் பகிர்தல்
- ஒவ்வொரு குழுவினரும் மரத்தின் சிறப்புகளைக் கூறுதல்
- ஆசிரியர் சார்ட்டில் பதிவு செய்தல்
- ஆசிரியர் தனது குறிப்பை வெளியிடுதல்

எ.கா.: **நான் ஆலமரம்**

நான் என்னை நாடி வந்தவர்களுக்கு நிழல் தருகிறேன். பறவைகளுக்கு உணவும், வீடும் தருகிறேன், நானே சிறந்தவன்

**நான் வேப்பமரம்**

என்னிடம் அதிக மருத்துவக் குணம் உள்ளது. இலை, விதை, பட்டை அனைத்தும் மருந்துகளாகும். மரப்பொருட்கள் செய்ய பயன்படுகிறேன். நானே சிறந்தவன்.

**நான் வாழை மரம்**

என்னுடைய இலை, பூ, பழம், காய், தண்டு, நார் என அனைத்துப் பகுதிகளையும் மக்கள் பயன்படுத்துகிறார்கள் நான் தான் சிறந்தவன்.

**நான் தென்னைமரம்**

என்னிடமுள்ள இளநீர், தேங்காய், கீற்று, மட்டை, நார் போன்ற பொருட்கள் மக்களுக்குப் பயன்படுகிறது. நான் உணவாக, எண்ணெய்யாக, தீவனமாக, உரமாக, விறகாக, கயிறாக, துடைப்பமாக மக்களுக்குப் பயன்படுகிறேன். நானே சிறந்தவன்

**மாணவர்கள் மேம்படுத்திய பின்னர் ஒவ்வொரு குழுவினரும் எழுதி வெளியிடுதல்.**

- ஆசிரியர்/குழுவினர் மதிப்பீடு செய்தல்
- மாணவர்கள் பதிவு செய்துகொள்ளுதல்

**நீங்கள் மரங்களாகவும், முதியவர்களாகவும் மாறி கதையை நடித்துக் காட்டுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவினர் மரங்களாகவும் முதியவராகவும் கதாபாத்திரங்களை ஏற்றுக்கொள்ளல்

- கதையை ஓரிருமுறை வாசித்தல்
- கருத்தைப் புரிந்துகொள்ளுதல்
- கதாபாத்திரங்கள் தங்களுக்குரிய கதைப் பகுதியை முடிவு செய்தல்
- கதைப் பகுதியை பலமுறை வாசித்தல்
- குழுக்கள் வகுப்பில் நடித்துக் காட்டுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- மேம்படுத்தி நடித்துக் காட்டுதல்
- ஆசிரியர் தேவையான இடங்களில் உதவி செய்தல்
- சிறப்பாக நடித்தவர்களையும் குழுவையும் பாராட்டுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கதாபாத்திரங்களைப் பொருத்தமாகத் தேர்ந்தெடுத்தனர்.
- கதையைப் பொருத்தமாக நடித்துக் காட்டினர்
- கதையில் கருத்து வெளிப்பட்டுள்ளது

**படக்கதையை வாசித்து மரங்களின் பயன்களை எழுதுங்கள்**

- மாணவர்கள் பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்
- மரங்களின் பயன்களைக் கேட்டல்.
- ஒருசில மாணவர்களுக்கும் கூற வாய்ப்பு கொடுத்தல்
- ஆசிரியர் சார்ட்டில் பதிவு செய்தல்.
- மேம்படுத்துதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- மாணவர்கள் தங்களது பதிவேட்டில் எழுதுதல்.

ஆலமரம் –
- நிழல் தருகிறது
- பறவைகளுக்கு உணவும், தங்க இடமும் தருகிறது

வேப்பமரம் –
- மருத்துவக் குணம் உள்ளது
- இலை, விதை, பட்டை மருந்துகளாகப் பயன்படுகிறது
- மரப் பொருட்கள் செய்யப் பயன்படுகிறது

வாழை மரம் – ◆ இலை, தண்டு, பூ, நார், காய், பழம் அனைத்தும் பயன்படுகிறது

தென்னை மரம் – ◆ இளநீர், தேங்காய், மட்டை, கீற்று, நார் ஆகிய அனைத்தும் பயன்படுகிறது.

◆ உணவு, எண்ணெய், விறகு, துடைப்பம், உரம், கயிறு போன்றவற்றிற்குப் பயன்படுகிறது

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- பாடப்பகுதியை நன்கு வாசித்தனர்
- மரங்களின் பயன்களைக் கண்டறிந்துள்ளனர்

## அலகு மதிப்பீடு

1. உன்னால் வாழ்கிறோம் என்ற பாடலில் உங்களுக்கு விருப்பமான வரிகள் எவை? காரணத்தை எழுதுங்கள்
2. தொடரின் முதல் எழுத்தை மாற்றி எழுதுங்கள்

   காட்டைக் கடந்து வந்தாயோ?

   மே

   நா
3. சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமையுங்கள்

| | | |
|---|---|---|
| ம | | 1. |
| கு | லை | 2. |
| இ | | 3. |
| க | | 4. |

4. நதியின் அழகை வருணித்து நான்கு தொடர்கள் எழுதுங்கள். (சலசல, வளைந்து நெளிந்து, பறந்து விரிந்து, வற்றி வறண்ட)
5. கதை நிகழ்வை வரிசைப்படுத்தி எழுதுவோம்
   - பீர்பால் வைர மோதிரத்தின் மீது சாணியைப் போட்டார்.
   - யாரையாவது கிணற்றில் இறங்கச் சொல்லி மோதிரத்தை எடுத்துவிட்டால் போகிறது.
   - கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா பார்ப்போம்
   - கிணற்றுக்குள் இறங்காமலே மோதிரத்தை எடுக்கமுடியுமா? என்று கேட்டார்?

- மூளையைப் பயன்படுத்தினால் முடியாதது ஒன்றுமில்லை.
- கவனமாக நூலைப்பிடித்து இழுக்க கல்லும் சாணியும் மோதிரமும் மேலே வந்தது.

6. நீர் நிலைகளின் பெயர்களை எழுதுங்கள்.

(ஆறு, ஏரி, குளம், குட்டை, கிணறு)

1.
2.
3.
4.
5.

7. குள்ளநரி கடலின் ஆழத்தை அளந்த அனுபவத்தை நிகழ்வுகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தி எழுதுங்கள்

1. காட்டை விட்டு வெளியே வந்தது
2.
3.
4.
5.
6.

8. பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதுங்கள்.

1. அதன் இறகு ஒன்று உதிர்ந்து கீழே விழுந்துவிட்டது
2. அன்பிற்குரிய பையனே நீ யார்
3. இறகிலிருந்து இனிமையான பாடல் ஒலித்தது
4. எனக்கு இந்த இறகைத் திருப்பித் தந்துவிடுகிறாயா
5. புனிதமான இறகு யாருக்குக் கிடைத்தது

9. கன்னியாகுமரிக் கடலின் அழகினைக் குறிப்பிடும் பாடலில் அமைந்துள்ள இடங்களாக வருபன எவையெல்லாம்?

1. மின்னும் மணற்பரப்பு
2.
3.
4.

10. சரியானவற்றை (✓) அடையாளமிடுவோம்

- தூய்மையான காற்று வேண்டும் ( )
- சுத்தமான சுற்றுப்புறம் வேண்டாம் ( )
- நிழல்தரும் மரம் வளர்ப்போம் ( )
- மரங்களை வெட்டுவோம் ( )
- பசுமை பூமியைப் பேணுவோம் ( )

11. ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டுப் பள்ளிக்கூடத்தில் ஊர்வலம் நடத்த முத்திரை வாக்கியங்கள் தயாரிப்போம்.

மரம் ஒரு வரம்

12. பயன்களை எழுதுவோம்

1. வாழை இலை
2. வாழைக்காய்
3. வாழைப்பூ
4. வாழைப் பழம்
5. வாழை நார்
6. வாழைத் தண்டு

13. 1. தண்ணீரின் பயன்கள் என்னென்ன?
2. மழைப் பொழிய நாம் என்ன வளர்க்க வேண்டும்?
3. மரங்களின் பயன்கள் எழுதுங்கள்?
4. கடல் நீரின் சுவை என்ன?

# 2 ஊசியின்றி உயிர் வாழ்வோம்

**அலகு அறிமுகம்**

மனித வாழ்க்கையில் ஒவ்வொருவரிடமும் சுகாதாரம் தேவை. உடல் ஆரோக்கியமுடன் இருக்க நோயில்லாமல் வாழ வேண்டும். அதற்கு சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும். உடல் நல்ல கட்டமைப்புடன் இயங்க சரிவிகித உணவுகளான பாரம்பரிய நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

"பெருந்தீனி வாளை விட அதிகமாக கொல்லும்" எனவே அளவுடன் உணவை உட்கொள்ள வேண்டும். அதிகப்படியான உணவை உண்பதால் நோயாளிகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே செல்கிறது. வாழ்வதற்காக உண்ண வேண்டுமே தவிர உண்பதற்காக வாழக்கூடாது. விருந்தையும் மருந்துபோல் உண்ண வேண்டும்.

நல்ல ஆரோக்கியம் நமது ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே அதிகாலையில் எழுந்து உடற்பயிற்சி செய்வது அவசியமாகிறது. மனமும், உடலும் சுறு சுறுப்பாக இயங்க உணவு, ஓய்வு, உடற்பயிற்சி, தூக்கம் ஆகியன இன்றியமையாதவை.

இவற்றைக் கடைபிடித்தால் எதிர்காலத்தில் நல்ல ஆரோக்கியம் உள்ள சந்ததியை உருவாக்கலாம். இந்த நம்பிக்கையைக் குழந்தைகள் அடையும் பொருட்டே "ஊசியின்றி உயிர் வாழ்வோம்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வலகில் 'உண்டு மகிழ, நலம்! நலமே விளைக!, நூறுவயது வாழ....! ஆகிய மூன்று துணை அலகுகள் உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இதற்கு வலு சேர்ப்பதற்காகவும் கருத்துகளை அடையவும் சிறு கவிதைகள், கதைகள், கடிதம், பத்திரிகைச் செய்தி ஆகியன சிறு சிறு பாடப்பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. இவற்றைக் கற்பதன் வாயிலாக கற்றல் இலக்குகளையும் திறன்களையும் எளிதில் அடையலாம். கற்பித்தும் கற்றும் பயன்பெறுங்கள்.

இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளுக்குச் சுமார் 30 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப்பான்மைகள் | | | |
| சுகாதாரம் | சரிவிகித உணவு முறை | கவிதை<br>கதை<br>கடிதம் | உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பல உணவுப் பொருட்கள் உள்ளன<br><br>*ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்<br><br>துரித உணவு பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் நொறுக்குத்தீனி ஆகிய உணவுகள் | • வாசிப்புப் பகுதியை வாசித்துக் கருத்தைப் புரிந்து கொள்கிறார்கள்<br>• மொழிச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்<br>• சிறு தானியங் களையும் அவற்றின் பயன்களையும் அறிந்து கொள்கிறார்கள்<br>• கதையின் முக்கிய நிகழ்வுகளைக் கண்டறிகிறார்கள்<br>• சத்தான உணவு தொடர்பான கருத்துகளைப் பெறுகிறார்கள் | சத்தான உணவுகளை உண்ண வேண்டும் என்ற மனப்பான்மை | அருஞ்சொற் பொருள்<br>எதிர்ச்சொல்<br>பழமொழிகள்<br>பிரித்தெழுதுதல்<br>ஒத்த ஓசையுடைய சொற்கள்<br>தொடர்கள் அமைத்தல்<br>உரையாடல் எழுதுதல்<br>வினா வாக்கியங்கள் கண்டறிதல் | கவிதை வரிகளை நிரப்புதல்<br><br>கருத்தைக் கூறுங்கள் / எழுதுதல்<br><br>விடை எழுதுதல்<br><br>உள்ளடக்கம் கூறுதல் | மதிப்பீட்டுக் குறிப்பின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும் தனிநபர்/ குழு/ ஆசிரியர் மதிப்பீடு |
| | உடல் ஆரோக்கியம் | குறிப்பு | உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கும்<br><br>உணவு, உடற்பயிற்சி உறக்கம் ஓய்வு போன்றவற்றைச் சரியான முறையில் கடைப்பிடிக்க வேண்டும். | • துரித உணவு பதப்படுத்தப்பட்ட உணவு நொறுக்குத்தீனி இவற்றின் தீமைகளை அறிந்து கொள்கிறார்கள்<br>• கதைக்குப் பொருத்தமான உரையாடல் எழுதுகிறார்கள்<br>• கடிதத்தின் அமைப்பை அறிந்து கொள்கிறார்கள் | உணவுப் பொருட்களை சுத்தமாக உண்ண வேண்டும் என்ற மனப்பாங்கு | | குறிப்பை வாசித்து விளக்கம் எடுத்து எழுதுதல்<br><br>கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுதல்<br><br>அகரமுதலியைப் பயன்படுத்துதல் | சரிவிகித |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சரியான அளவிலும் நேரத்திலும் உணவு உட்கொள்வது நல்லது<br>உணவுப் பொருட்களைச் சுத்தமாக உண்ண வேண்டும் | • பாடல்களை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்<br>• பாடல்களின் கருத்துகளைக் கூறுகிறார்கள்<br>• விருப்பமான வரிகளைக் கண்டறிந்து காரணத்தைக் கூறுகிறார்கள்<br>• பாடலை முழுமைப்படுத்து கிறார்கள்<br>• உரையாடல் பகுதிகளை நிறைவு செய்கிறார்கள்<br>• வினா வாக்கியங்களைக் கண்டறிகிறார்கள் | | | கதைக் கூறுதல்<br>உரையாடல் எழுதுதல்<br>விடை எழுதுதல்<br>வினா வாக்கியம் எழுதுதல் | |
| | உடற்பயிற்சி | கவிதை<br>செய்தித்தாள்<br>குறிப்பு | உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விளையாட்டுகள் ஏராளம் உள்ளன<br>தினசரி உடற்பயிற்சி செய்வது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்<br>உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக்கள் மனதிற்கு உற்சாகத்தைத் தருகிறது . | • விளக்கக் குறிப்பை வாசித்துக் கருத்தைக் கூறுகிறார்கள்<br>• உடற்பயிற்சியின் தேவையைப் புரிந்து கொள்ளுகிறார்கள் | உடற்பயிற்சி செய்வதால் உடல் ஆரோக்கியம் மேம்படும் என்ற மனநிலை | | மெட்டமைத்துப் பாடுதல்<br>கலந்துரையாடிக் கூறுதல்<br>தொடர் அமைத்தல்<br>கூற்றுகளைச் சரி பார்த்தல் | |

## கற்றல் இலக்குகள்

- வாசிப்புப் பகுதியை வாசித்துக் கருத்தைப் புரிந்துகொள்கிறார்கள்
- மொழிச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்
- சிறு தானியங்களையும் அவற்றின் பயன்களையும் அறிந்து கொள்கிறார்கள்
- கதையின் முக்கிய நிகழ்வுகளைக் கண்டறிகிறார்கள்
- சத்தான உணவு தொடர்பான கருத்துகளைப் பெறுகிறார்கள்
- துரித உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு, நொறுக்குத்தீனி இவற்றின் தீமைகளை அறிந்து கொள்கிறார்கள்
- கதைக்குப் பொருத்தமான உரையாடல் எழுதுகிறார்கள்
- கடிதத்தின் அமைப்பை அறிந்துகொள்கிறார்கள்
- பாடல்களை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்
- பாடல்களின் கருத்துகளைக் கூறுகிறார்கள்
- விருப்பமான வரிகளைக் கண்டறிந்து காரணத்தைக் கூறுகிறார்கள்
- பாடலை முழுமைப்படுத்துகிறார்கள்
- உரையாடல் பகுதிகளை நிறைவு செய்கிறார்கள்
- வினா வாக்கியங்களைக் கண்டறிகிறார்கள்
- உடற்பயிற்சியின் தேவையைப் புரிந்து கொள்கிறார்கள்
- விளக்கக் குறிப்பை வாசித்துக் கருத்தைக் கூறுகிறார்கள்

## கற்றல் துணைக் கருவிகள்

- தானியங்கள்
- காய்கறிகள்
- கனிகள்
- உணவு வகைகள்
- நொறுக்குத் தீனிகள்
- காணொளிக் காட்சிகள்

## நுழைவுச் செயல்பாடுகள்

வகுப்பறையில் உணவுப் பொருட்களுக்கான கண்காட்சியை ஒழுங்கு செய்யுங்கள். இதற்காக வகுப்பறையை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளவும். முதல் பகுதியில் தானியங்கள் அல்லது தானியங்களின் சார்ட், இரண்டாவது பகுதியில் வீட்டில் சமைத்த உணவுகள் அல்லது படங்கள் மூன்றாவது பகுதியில் நொறுக்குத்தீனி, துரித உணவு, பதப்படுத்தப்பட்ட உணவுகள் / படங்கள், நான்காவது பகுதியில் பழங்கள்/ படங்கள், ஐந்தாவது பகுதியில் காய்கறிகள்/படங்கள் இவ்வாறு ஒழுங்கு செய்யவும். மாணவர்களை இரண்டுபேர் அடங்கிய குழுவாக ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்று இவற்றை விளக்க வேண்டும். இவற்றை உண்பதால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆசிரியர் எடுத்துக் கூறுதல். மாணவர்கள் புரிந்துள்ளனர் என்பதை உறுதி செய்ய சில வினாக்களை எழுப்ப வேண்டும்.

குழந்தைகள் பதில் கூறட்டும்.

பின்பு காணொளி வாயிலாக மேற் குறிப்பிட்டவற்றைக் காண்பித்தல். ஆரோக்கியமான உணவுகள், உடலுக்குத் தீமை தரும் உணவுகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளச் செய்தல். நன்மை, தீமைகளைக் கலந்துரையாடிக் கூறட்டும்.

இதை விளக்கும் ஒரு பாடலைப் பாடுவோமா எனக் கூறி பாடப்பகுதிக்குள் நுழைதல்.

# உண்டு மகிழ....!

## செயல்பாடுகள்

**பாடலில் வரும் தானியங்களின் பெயர்களை எழுதுங்கள்.**

மாணவர்களிடம் உணவோடு தொடர்புடைய சில வினாக்களைக் கேட்டு உரையாடலைத் துவக்குங்கள்.

எ.கா :

எல்லோரும் இன்று காலையில்
உணவருந்திவிட்டு வந்தீர்களா? இன்று
என்னென்ன உணவுகளைச் சாப்பிட்டீர்கள்?

- ஒருசிலர் பதில் கூறட்டும்

மாணவர்களின் பதிலைச் சார்ட்டில் எழுதுங்கள்.

எ.கா:

நெல், கோதுமை, கேழ்வரகு, சோளம்

- பாடப்பகுதியில் "சீர் உணவு" என்ற தலைப்பில் உள்ள பாடலை வாசிப்போமா? எனக் கூறி வாசிக்கத் தூண்டுதல்
- அனைவரும் வாசித்தல்
- பாடலில் வரும் தானியங்களின் பெயர்களைக் கூறச் செய்தல்
- வெளியிட வாய்ப்பளித்தல்
- அவற்றைச் சார்ட்டில் ஆசிரியர் Smart board /பதிவு செய்தல்
- ஒரு சிலருக்கு வாசிக்க வாய்ப்பளித்தல்
- ஆசிரியர் மாதிரியை வெளியிடுதல்
- குழந்தைகள் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்

எ.கா :

சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, வரகு, குதிரைவாலி

**சிறு தானியங்கள்**

கம்பு

சோளம்

தினை

கேழ்வரகு

சாமை

குதிரைவாலி

வரகு

காடைக்கண்ணி

## பாடல் வரிகளை நிரப்புங்கள்

கம்பங்கூழை ..........................................

காலை ........................................................

சத்துகள் ....................................................

- பாடல் வரிகளை அட்டையில் எழுதி ஆசிரியர் வகுப்பறையில் காண்பித்தல்.
- பாடல் வரிகளை அட்டையைப் பார்த்து வாசித்தல்.
- மாணவர்கள் விடுபட்ட பாடல் வரிகளைப் பாடப்பகுதியைப் பார்த்து அதை ஆசிரியர் அட்டையில் எழுதுதல்
- மாணவர்களை வாசிக்க வைத்தல்

கம்பங்கூழை நாள்தோறும்
காலைவேளை அருந்திட்டால்
சத்துகள் தாம் ஏராளம்

### மதிப்பீடு செய்தல்

- மாணவர்கள் தெளிவாக எழுதியுள்ளார்கள்
- பிழையில்லாமல் எழுதியுள்ளார்கள்

### எனக்கு எதிரி யார்? இணையுங்கள்

- செயல்பாட்டுப் பகுதியிலுள்ள சொற்களை மாணவர்கள் வாசித்தல்
- எதிர்ச் சொற்களைக் கூறச் செய்தல்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- குழந்தைகள் அதை வாசித்தல்
- ஆசிரியர் தனது படைப்பை வெளியிடுதல்
- குழந்தைகள் வாசித்தல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

| | | |
|---|---|---|
| நன்மை | x | தீமை |
| ஏராளமான | x | குறைவான |
| சிறிய | x | பெரிய |

# இயற்கை உணவு

## செயல்பாடுகள்

**கந்தசாமியிடம் இலட்சுமியம்மாள் கூறியதைச் சொல்லுங்கள்/ எழுதுங்கள்**

- குழந்தைகள் பாடப்பகுதியை நன்கு வாசித்தல்
- ஆசிரியர் ஓரிருமுறை வாசித்துக் காட்டுதல்
- மீண்டும் மாணவர்கள் வாசித்தல்
- பாடப்பகுதியின் கருத்தை ஆசிரியர் கூறுதல்
- கந்தசாமிக்கும் இலட்சுமியம்மாளுக்கும் நடைபெற்ற உரையாடலை ஆசிரியர் தெளிவுபடக் கூறுதல்
- குழந்தைகள் புரிந்து கொண்டனர் என்பதை உறுதி செய்தல்
- இலட்சுமியம்மாள் கூறியவற்றைக் குழந்தைகள் கூறுதல்
- ஆசிரியரும் குழந்தைகளும் கலந்துரையாடுதல்
- குழந்தைகள் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- ஆசிரியர் தனது படைப்பை வெளியிடுதல்
- குழந்தைகள் ஒப்பீடு செய்து மேம்படுத்தி எழுதுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- குழந்தைகள் கருத்தைப் புரிந்துள்ளனர்
- உரையாடலைச் சரியாக எழுதினர்
- எழுத்துப் பிழையின்றி எழுதினர்

**சத்தான உணவு வகைகளை எழுதுங்கள்**

- ஆசிரியர் சத்தான உணவுகள் எவை என்பதைப் படங்கள் காண்பித்து விளக்குதல்.
- மாணவர்களைக் குழுவாக்குதல்
- சத்தான உணவுகளை எழுத வைத்தல்.
- ஒவ்வொரு குழுவையும் வாசிக்க வைத்தல்.
- ஆசிரியர் இடை இடையே ஈடுபட்டு மாணவர்களுக்கு உதவுதல்

- எழுதியதைக் குழந்தைகள் வகுப்பில் வெளியிடல்
- ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- குழந்தைகள் மேம்படுத்திக் குறிப்பேட்டில் எழுதுதல்
- வகுப்பில் பின்தங்கிய மாணவர்களுக்குச் சத்தான உணவு வகைகளைக் கண்டுபிடிக்க உதவுதல்.

**கந்தசாமி தனது குழந்தைகளுக்கு என்னென்ன அறிவுரைகளைக் கூறியிருப்பார்? சொல்லுங்கள், எழுதுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் கலந்துரையாடல் குறிப்பு வழங்குதல்
- குறிப்பு : (கந்தசாமி தனது குழந்தைகளுக்கு என்னென்ன அறிவுரைகளை வழங்கியிருப்பார்)
- குழந்தைகள் குறிப்பை வைத்துக் கலந்துரையாடுதல்
- ஒவ்வொரு குழந்தையும் தங்களது கருத்தைக் குழுவில் கூறுதல்
- சரியான கருத்தை ஏற்றுக் கொள்ளுதல்
- ஒவ்வொரு குழுவும் கருத்துகளை வகுப்பில் கூறுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- குழுக்கள் கூறுவதை ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடுதல்
- குழந்தைகள் ஒப்பீடு செய்தல்
- மேம்படுத்தித் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்

**சத்தான உணவு வகைகளை உண்பதால் ஏற்படும் நன்மைகளை எழுதுங்கள்**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் கலந்துரையாடல் குறிப்பு வழங்குதல்
- குழந்தைகள் குறிப்பை வைத்துக் கலந்துரையாடுதல்
- ஒவ்வொரு குழந்தையும் தங்களது கருத்தைக் குழுவில் கூறுதல்
- சரியான கருத்தை ஏற்றுக் கொள்ளுதல்
- ஒவ்வொரு குழுவும் கருத்துகளை வகுப்பில் கூறுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்

- குழுக்கள் கூறுவதை ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடுதல்
- குழந்தைகள் ஒப்பீடு செய்தல்
- மேம்படுத்தித் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்

சத்தான உணவுகளை உண்டால் நோய் வராது

உடல் ஆரோக்கியமாக இருக்கும்

உடல் சோர்வு வராது

## உடம்பைப் போற்றுக

### செயல்பாடுகள்

**கடிதத்தை வாசித்து அதில் வர வேண்டிய அமைப்புகளைக் கூறுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் மாதிரி கடிதத்தை வழங்குதல்
- கடிதத்தைக் குழுவில் வாசித்தல்
- கடிதத்தில் இடம்பெற்றுள்ள அமைப்பைக் கண்டறிதல்
- ஆசிரியர் ஈடுபட்டு உதவி செய்தல்
- குழுவில் கடிதத்தின் அமைப்பை விவாதித்தல்
- ஒரு குழு கடிதத்தின் அமைப்பை எழுதி வெளியிடுதல்
- பிற குழுக்கள் மதிப்பிடல்
- குழு வெளியீட்டை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- அனைவரும் மேம்படுத்தித் தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்

கடிதம் எழுதும்போது எவையெல்லாம் கவனிக்க வேண்டும்

இடம், நாள், தொடக்கம் அன்புள்ள, ஆருயிர், மதிப்புமிக்க, தெளிவான பொருள்.

முடிவு, (இவண், இப்படிக்கு) முகவரி

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- குழுச் செயல்பாட்டில் ஈடுபடுகின்றனர்
- கடிதத்தின் அமைப்பைக் கண்டறிந்துள்ளனர்
- கடித அமைப்புகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன

## நலம்! நலமே விளைக!

### செயல்பாடுகள்

**திருக்குறள் பாடலை வாசியுங்கள் அதன் கருத்தைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்து எழுதுங்கள்.**

- மாணவர்களைக் குழுவாக்குதல்
- குழுவில் திருக்குறளை வழங்குதல்
- திருக்குறளையும் அதன் பொருளையும் ஆசிரியர் சார்ட்டில் எழுதி தொங்கவிடுதல்
- குழந்தைகள் திருக்குறளையும் பொருளையும் ஆசிரியர் உதவியுடன் வாசித்தல்
- குழந்தைகள் புரிந்துகொண்டனர் என்பதை உறுதி செய்தல்
- தொடர்ந்து குழந்தைகள் பாடப்பகுதியை வாசித்தல்
- பாடப்பகுதியில் குறளின் பொருள் எங்குள்ளது என்பதைக் கண்டறிதல்
- பொருளைக் குழுவில் கூறுதல்
- குறிப்பேட்டில் எழுதுதல்
- ஆசிரியர் படைப்புடன் ஒப்பிட்டு மேம்படுத்துதல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

**பொருள் :**

நாம் அடிக்கடி உண்ணக்கூடாது. ஒருமுறை உண்டது சீரணம் ஆன பின்னரே உண்ண வேண்டும். இந்தப் பழக்கத்தைக் கடைபிடித்தால் உடலுக்கு மருந்தே தேவையில்லை.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- மாணவர்கள் தெளிவாக வாசித்தனர்
- திருக்குறளின் பொருளைக் கண்டறிந்தனர்

**பசித்த பின்பு உண்ண வேண்டும் சரியா? தவறா? கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் கலந்துரையாடல் குறிப்பு வழங்குதல்
  குறிப்பு : பசித்த பின்பு உண்ண வேண்டும் சரியா? தவறா?
- குழந்தைகள் குழுவில் கலந்துரையாடுதல்
- குழந்தைகள் தங்களது கருத்தைக் குழுவில் கூறுதல்
- சரியான கருத்தை உட்படுத்துதல்
- ஒவ்வொரு குழுவும் வகுப்பில் கூறுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- மீண்டும் மேம்படுத்தி எழுதுதல்
- வகுப்பில் வெளியிடுதல்
- பசித்த பின்பு உண்பதால் உடல் நலம் பெறும்

**அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்**

- குழந்தைகள் செயல்பாட்டுப் பகுதியிலுள்ள வார்த்தைகளை நன்கு வாசித்தல்
- வார்த்தைகளுக்கானப் பொருளைப் புத்தகத்தின் இறுதிப் பக்கத்தில் தரப்பட்டுள்ள அகரமுதலியைப் பயன்படுத்திக் கண்டுபிடித்தல்
- கண்டுபிடித்ததை வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- குழந்தைகள் சரியான பொருளைக் கண்டறிந்தனர் என்பதை உறுதி செய்தல்

மாணவர்களைக் குழுவாக அமைத்து அகரமுதலியைப் பார்த்து யார் முதலாவது சொல்கிறார்களோ அந்தக் குழுவிலுள்ள மாணவர்களைக் கரும்பலகையில் எழுத வைத்தல். நன்றாக செய்த குழுவைப் பாராட்டுதல்.

- கிண்டல் – கேலி/நக்கல்
- ரகசியம் – மறைவான
- சீரணம் – செரிமானம்
- உபதேசம் – அறிவுரை
- புடைத்தது – வீங்கியது
- வருத்தம் – கவலை/ துயரம்

## கழுவி! கழுவி!

### செயல்பாடுகள்

**பாடப்பகுதியை வாசித்துக் கதையைக் கூறுங்கள்**

- குழந்தைகள் தனித்தனியாக பாடப்பகுதியை வாசித்தல்
- இரண்டு மூன்று முறை வாசித்தல்
- ஆசிரியர் வாசித்துக் காட்டுதல்
- குழந்தைகளைக் காய்கறி, பழங்கள் அடிப்படையில் குழுவாக்குதல்
- குழுவில் வாசித்துக் கருத்தைப் புரிந்து கொள்ளுதல்
- குழுக்கள் கதையைக் கூறுதல்
- பிற குழுக்கள் மதிப்பிட்டு விடுபட்ட கதைப் பகுதியைக் கூறுதல்
- ஆசிரியர் உணர்வுப் பூர்வமாகச் செய்கையுடன் கதையைக் கூறுதல்
- ஒவ்வொரு குழுவும் மேம்படுத்திக் கதையை வகுப்பில் கூறுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- குழந்தைகள் தவறின்றி பாடப்பகுதியை வாசித்தனர்
- குழந்தைகள் கருத்துகளைப் புரிந்துள்ளனர்
- கதையைத் தங்கள் சொந்த நடையில் கூறினர்

**பழங்களைக் குறித்துத் தாய் ஈயும், குட்டி ஈயும் உரையாடியவற்றைக் குறிப்பிடுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் பாடப்பகுதியை வாசித்தல்
- குட்டி ஈயும், தாய் ஈயும் உரையாடிய பகுதியை மீண்டும் மீண்டும் வாசிக்கச் செய்தல்
- வாசித்தப் பகுதியைக் குழுவில் வெளியிடுதல்
- பிற குழுக்கள் மதிப்பிடுதல்
- விடுபட்டவற்றை உட்படுத்தி மேம்படுத்துதல்
- ஆசிரியர் உதவி செய்தல், சார்ட்டில் எழுதுதல்
- பின்தங்கிய மாணவர்களும் கூற வாய்ப்பளித்தல்

- மேம்படுத்தியதை வகுப்பில் வெளியிடுதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடுதல்
- இரு படைப்புகளையும் ஒப்பீடு செய்தல்
- குழந்தைகள் குறிப்பேட்டில் எழுதுதல்

ஆசிரியர் அட்டையில் எழுதி வைத்து மாணவர்களுக்கு ஏற்றத்தாழ்வுடன் வாசித்துச் சொல்ல வேண்டும்.

- மாணவர்கள் இதை நன்றாக வாசித்துத் தனது குறிப்பேட்டில் எழுதிக்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| குட்டி ஈ | – | அம்மா! பசிக்கிறது |
| தாய் ஈ | – | என்னுடன் வா; உனக்கு உணவைத் தேடக் கற்றுத் தருகிறேன் (கடைக்கு அழைத்துச் செல்லுதல்) |
| | – | இதுதான் பழக்கடை முன்பெல்லாம் இங்க தான் பழம் தின்போம் |
| குட்டிஈ | – | அம்மா ஏன் இப்ப நீங்க சாப்பிடுவதில்லை? |
| தாய் ஈ | – | இப்பொழுது விற்கும் பழங்களை நாம் சாப்பிடக்கூடாது |
| குட்டி ஈ | – | அம்மா இந்தப் பழம் அழகாக இருக்கிறதே இதைச் சாப்பிடலாமா? |
| தாய் ஈ | – | இதைச் சாப்பிடாதே இப்ப வரும் பழங்களில் எல்லாம் பூச்சிமருந்து அடிச்சிருக்காங்க இதச்சாப்பிட்டால் நம்ம உடம்பும் வயிறும் கெட்டுப் போகும். |
| குட்டி ஈ | – | நாம எந்தப் பழங்களைச் சாப்பிடலாம். |
| தாய் ஈ | – | வா உன்னைப் பூச்சிமருந்து அடிக்காத வீட்டுத் தோட்டத்திற்கு அழைத்துச் செல்கிறேன். (கூட்டிச் செல்லுதல்) |
| குட்டி ஈ | – | ஆ! என்ன அழகாயிருக்கு! |
| தாய் ஈ | – | இந்தத் தோட்டத்திலுள்ள காய்கறிகள், பழங்கள் எல்லாமே பூச்சிமருந்து அடிக்காத நல்ல பழங்கள். இந்தா! கொய்யாப்பழம். |
| குட்டி ஈ | – | ஆ! ஆ! இந்தப் பழம் எவ்வளவு சுவையாகயிருக்கிறது. |
| தாய் ஈ | – | இந்தப் பழங்கள் நமது உடலுக்கு நல்லது. |

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பாடப்பகுதியை நன்றாக வாசித்தனர்
- உரையாடல் கருத்தைக் கண்டறிந்தனர்
- மேம்படுத்திய உரையாடலை வெளியிட்டனர்

**வீட்டுத் தோட்டத்தில் விளையும் பழங்களை எழுதுங்கள்**

- வீட்டில் விளையும் பழங்களைக் குழந்தைகளைக் கூற வைத்தல்.
- ஒவ்வொருவரும் சொல்வதைக் கரும்பலகையில் எழுதுதல்
- எழுதியதை ஒரு மாணவனை அழைத்து வாசிக்கச் செய்தல்
- வாசித்ததை மாணவர்கள் குறிப்பேட்டில் எழுத வைத்தல்.

(மாம்பழம், பப்பாளி, கொய்யா, வாழை, பலா, ஆரஞ்சு,.............)

**ஈக்கள் பேசியதைக் கேட்ட யாமினி எடுத்த முடிவைக் குறிப்பிடுங்கள்**

- குழந்தைகளைப் பாடப்பகுதியின் கடைசிப் பகுதியை வாசிக்கச் செய்தல்
- வாசித்துக் கருத்தைக் கூறச் செய்தல்
- பிறர் மதிப்பிட்டு மேம்படுத்துதல்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- கரும்பலகையில் எழுதிய பகுதியைக் குழந்தைகள் வாசித்தல்
- தங்களது குறிப்பேட்டில் எழுதுதல்

**பூச்சி மருந்து அடித்த பழங்களை நாம் சாப்பிடக்கூடாது என்று நண்பர்களிடமும் அருகில் உள்ள மற்றவர்களிடமும் எடுத்துரைப்பேன் நானும் கழுவி உண்பேன்.**

**நீங்கள் பழங்களையும் காய்கறிகளையும் எவ்வாறு சாப்பிடுவீர்கள்? கலந்துரையாடி எழுதுங்கள்**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் கலந்துரையாடிக் குறிப்பு வழங்குதல்
- **குறிப்பு : (நீங்கள் பழங்களையும் காய்கறிகளையும் எவ்வாறு சாப்பிடுவீர்கள்)**
- குழந்தைகள் குறிப்பை வைத்துக் கலந்துரையாடுதல்

- ஒவ்வொரு குழந்தையும் தங்களது கருத்தைக் குழுவில் கூறுதல்
- சரியான கருத்தை உட்படுத்துதல்
- ஒவ்வொரு குழுவும் கருத்துகளை வெளியிடுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- குழுக்கள் கூறுவதை ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- குழுக்கள் மேம்படுத்திக் குறிப்பேட்டில் எழுதுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- குழுவில் அனைவரும் பங்குபெற்றனர்
- கருத்துகளைக் கூறினர்

**பாடப்பகுதியில் வரும் வினா வாக்கியங்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுக்கள் பாடப்பகுதியை நன்றாக வாசித்தல்
- வினா வாக்கியங்களைக் குறித்து ஆசிரியர் விளக்குதல்
- வினா வாக்கியம் எவை என்பதைக் குழந்தைகள் புரிந்துள்ளனர் என்பதை உறுதி செய்தல்
- பாடப்பகுதியிலிருந்து வினா வாக்கியங்களைக் குழுக்கள் கண்டறிந்து கூறுதல்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- விடுபட்டவற்றைப் பிற குழுக்கள் கண்டறிந்து கூறுதல்
- அவற்றையும் கரும்பலகையில் எழுதுதல்
- ஆசிரியர் ஒருங்கிணைத்து எழுதுதல்
- குழந்தைகள் வாசித்தல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

- ஏன் அம்மா யாராவது நம்மை அடிப்பார்களா?
- இதச் சாப்பிடலாமா?
- அந்தப் பழத்தையாவது உண்ணலாமா?
- திராட்சையா?
- நமக்கு யார் கழுவித் தருவார்கள்?
- இந்தப் பழத்தை உண்ணலாமா?
- அதை ஏன் கேட்கிறாய்?
- நாம் எதைத் தான் உண்பது?

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- வினா வாக்கியங்களைப் புரிந்து கொண்டனர்
- வினா வாக்கியங்களைக் கண்டறிந்துள்ளனர்
- வினா வாக்கியங்களைச் சரியாக எழுதினர்

## ஊசியில்லா மருந்து

### செயல்பாடுகள்

**பாடலை இராக தாளத்துடன் பாடுங்கள்**

- மாணவர்கள் பாடல் வரிகளை வாசித்தல்
- ஆசிரியர் பாடலின் பொருளை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்
- ஆசிரியர் பாடலை இராகத்துடனும் தாளத்துடனும் உணர்வுப் பூர்வமாக பாடிக்காட்டுதல்
- குழுக்களாகப் பாடவைத்தல்
- பிற குழுக்கள் மேம்படுத்திப் பாடுதல்
- தனி நபராகப் பாடச் செய்தல்
- நன்றாகப் பாடிய நபரையும், குழுவையும் பாராட்டுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- சொற் தெளிவுடன் பாடுதல்
- குரல் வளம் நன்றாக உள்ளது
- ஏற்றத்தாழ்வுடன் பாடினர்
- அங்க அசைவுடன் பாடினர்

**உடற்பயிற்சி செய்வதனால் ஏற்படும் நன்மைகளைக் குழுவில் கலந்துரையாடிக் கூறுங்கள்**

- மாணவர்களைப் பள்ளி மைதானத்திற்குக் கொண்டு செல்லுதல்
- மாணவர்களை வட்டமாக நிற்க வைத்தல்
- ஆசிரியர் சில உடற்பயிற்சிகளைச் சொல்லிக் கொடுத்தல்
- உடற்பயிற்சியினால் ஏற்படும் நன்மைகளை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்.
- மாணவர்கள் பாடல் பகுதியை வாசித்தல்

- பாடலில் இடம்பெற்றுள்ள உடற்பயிற்சியால் ஏற்படும் நன்மைகளைக் கண்டறிதல்
- வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- பாடப்பகுதியில் இடம்பெறாத நன்மைகளையும் கூறச் செய்தல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

**உடற்பயிற்சியின் நன்மைகள்**

- உடல் உறுதி பெறுகிறது
- திறமை வளர்கிறது
- நோயில்லாமல் வாழலாம்
- ஆயக்கலைகளை அறிந்துகொள்ளுதல்
- உடல் அழகு பெறுகிறது
- இரத்த ஓட்டம் சீராகிறது
- உடல் கழிவுகள் வியர்வையாக வெளியேறுகிறது
- நல்ல பசி எடுக்கிறது

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- பாடப்பகுதியை நன்கு வாசித்துள்ளனர்
- உடற்பயிற்சியின் நன்மைகளை அறிந்துள்ளனர்
- உடற்பயிற்சியின் நன்மைகளைக் கண்டறிந்து கூறினர்

**இரு அணிகளாகப் பிரிந்து பாடலைப் பாடுங்கள்**

- மாணவர்களை இரண்டு குழுவாகப் பிரித்தல்
  துண்டு அட்டையில் அணி –1
  துண்டு அட்டையில் அணி –2 என எழுதுதல்
- மாணவர்கள் அட்டைகளை எடுத்தல்
- மாணவர்கள் எடுக்கும் அட்டைகளின்படி குழு பிரித்துப் பாடலைப் பாடுதல்
- முதல் குழு முதல் வரியைப் பாடியபின் இரண்டாவது குழு இரண்டாவது வரியைப் பாடுதல்.
- இவ்வாறு பாடலைத் தொடர்ந்து பாடுதல்

| அணி – 1 | அணி –2 |
|---|---|
| ★ உடற்பயிற்சி செய்வதால் | ★ உடலில் உறுதி வந்திடும் |
| ★ உடலும் உறுதி ஆவதால் | ★ ஓங்கித் திறமை வளர்ந்திடும் |
| ★ நோயில்லாமல் நாமெல்லாம் | ★ நூறு வயது வாழலாம் |
| ★ ஆய கலைகள் அனைத்தையும் | ★ அறிந்து இன்பம் அடையலாம் |
| ★ ___________________ | _____________________ |
| ★ ___________________ | _____________________ |
| ★ ___________________ | _____________________ |

★ அட்டையில் எழுதிவைத்து மாணவர்களைப் பாட வைத்தல் பின்தங்கிய மாணவர்களுக்கு ஆசிரியர் உதவி செய்து பாடவைக்க வேண்டும்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- மாணவர்கள் இராகத்துடன் பாடினர்
- பிழையில்லாமல் பாடினர்
- அனைவரும் பங்கெடுத்துள்ளனர்

**தொடர் அமையுங்கள்**

- குழந்தைகளை இரண்டு பேர் உள்ள குழுவாக்குதல்
- குழந்தைகள் செயல்பாட்டுப் பகுதியிலுள்ள மாதிரியை நன்கு வாசித்தல்
- பின்பு தரப்பட்டுள்ள வார்த்தைகளை வாசித்தல்
- வார்த்தைகள் வரும்படியான வாக்கியங்களைக் கூறுதல்
- ஒவ்வொரு குழுவும் கூறுதல்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- குழுவினர் வாக்கியங்களை வாசித்தல்
- மேம்படுத்திக் கூறுதல்
- ஆசிரியர் ஒருங்கிணைத்து எழுதுதல்
- ஆசிரியர் படைப்பை வெளியிடல்
- குழந்தைகள் குறிப்பேட்டில் எழுதுதல்

எ.கா : உறுதி – கட்டிடம் உறுதியாக இருந்தது
இன்பம் – நோயில்லா வாழ்க்கை இன்பமாக இருக்கும்
மருந்து – மருந்து நோயைக் குணமாக்கும்
அழகு – குழந்தை சிரித்தால் அழகு
ஓசை – யானைவரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே
ஊசி – ஊசியில்லா மருந்து மனிதனுக்கு இன்பம்

ஆசிரியர் அட்டையில் எழுதி மாணவர்களை வாசிக்க வைத்துக் குறிப்பேட்டில் எழுதச் சொல்லவும். அவர்களைப் பிழையின்றி வாசிக்க வைக்க வேண்டும்.

- இதுபோன்ற பிற தொடர்களை அமைக்கக் கூறுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- தொடர் அமைக்கும் முறையை அறிந்துள்ளனர்
- தொடர்களைச் சரியாக அமைத்துள்ளனர்
- அனைவரும் பங்கு பெற்றனர்.

## ஆளும் வளரணும் அறிவும் வளரணும்

### செயல்பாடுகள்

**கீழே கொடுத்திருக்கும் கூற்றுகளை வாசித்துச் சரியா (✓) தவறா (x) என அடையாளப்படுத்துங்கள்.**

- செயல்பாட்டுப் பகுதியில் உள்ள கூற்றுகளைக் குழந்தைகள் வாசித்தல்
- ஒவ்வொரு கூற்றுகளாக வாசித்துக் கருத்தைப் புரிந்துகொள்ளுதல்
- ஆசிரியர் கூற்றுகளை விளக்குதல்
- ஒவ்வொரு கூற்றுகளையும் சரி, தவறு என உறுதிசெய்தல்
- சரி, தவறு என அடையாளங்களைத் தகுந்த இடத்தில் இடுதல்
- இதைப் போன்று இரண்டாவது கூற்றை வாசித்துப் புரிய செய்தல்
- தொடர்ந்து மூன்று, நான்கு கூற்றுகளைச் செய்தல்.

- துரித உணவு சாப்பிடுவது உடலுக்கு நல்லது (x)
- அடிக்கடி உணவு உண்பது நல்லது (x)
- உடலினை உறுதி செய்ய உடற்பயிற்சித் தேவை (✓)
- எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும் (x)
- சத்தான உணவுகளை உண்பது நல்லது (✓)
- அதிகாலையில் நடைப்பயிற்சி மேற்கொள்வது நன்று (✓)
- பழங்களையும் காய்கறிகளையும் கழுவாமல் உண்ண வேண்டும் (x)
- சிறுதானியங்களில் கோதுமையும் ஒன்றாகும் (✓)
- நாம் நீண்டநாள் ஆரோக்கியமாக வாழ உடற்பயிற்சியும் உணவும் தேவை (✓)
- பசித்தபின் உண்பதே சிறந்தது (✓)

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- மாணவர்கள் தெளிவாக புரிந்துள்ளனர்
- எது சரி, எது தவறு என்று மாணவர்கள் சரியாக அடையாளப்படுத்தியுள்ளனர்.

## அலகு மதிப்பீடு

1. 'உண்டு மகிழ' எனும் பாடலில் குறிப்பிடும் சிறுதானியங்களின் நன்மைகள் என்னென்ன?
   - சீராக ______________________________
   - வராது எந்த ______________________________
   - வலிமையான ______________________________
2. சுவரொட்டி தயாரியுங்கள்

   உங்கள் பள்ளியில் நடைபெறும் இயற்கை உணவின் நன்மைகள் என்ற கருத்தரங்கிற்கானச் சுவரொட்டி எழுதி வெளியிடுங்கள்
3. வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்

   தின்று தின்று

   நடந்து நடந்து

திரு திரு
மொரு மொரு
மாறி மாறி

4. பாடலை வாசித்துக் குறிப்பு தயாரியுங்கள்

உடற்பயிற்சி செய்வதால்
உடலில் உறுதி வந்திடும்
உடலும் உறுதி ஆவதால்
ஓங்கித் திறமை வளர்ந்திடும்
நோயில்லாமல் வாழலாம்
நூறு வயது வாழலாம்
ஆயகலைகள் அனைத்தையும்
அறிந்து இன்பம் அடையலாம்

5. கழுவி! கழுவி!! பாடப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான பழக்கங்களை வாசித்து எழுதுவோம்

மாம்பழம் ______________________ பழுக்க வைத்தவை

திராட்சைப் பழம் ______________________

ஆப்பிள் பழம் ______________________ தோய்த்து வைத்தது.

6. சரியான பழக்கங்களை விடுபட்ட இடத்தில் எழுதவும்

மாம்பழத்தைத் தண்ணீரில் ______________________ போட்டு ஊறவைத்துப் பலமுறை கழுவித்தான் உண்ண வேண்டும்.

திராட்சைப் பழத்தைக் காம்பை எடுக்காமல் ______________________ கழுவி உண்ணவேண்டும்

ஆப்பிளை ______________________உண்ணக்கூடாது.

7. 1. சிறு தானியங்களின் பெயர்களை எழுதுங்கள்.
   2. மாம்பழங்களைப் பழுக்கவைக்கப் பயன்படுத்தும் கற்கள்
   3. ஆப்பிள் பளபளப்பாக இருக்க தோய்ப்பது
   4. வளவனுக்கு வயிறு வலியும் வாந்தியும் ஏன் வந்தது?
   5. கடிதத்தின் உறை மேல் எழுத வேண்டியது என்ன?

# 3 ஆடுவோம் பாடுவோம்

**அலகு அறிமுகம்**

தனி மனிதர்களைச் சமூகக் குழுக்களாக இணைப்பதற்கு அடிப்படை அம்சமாக விளங்குவது உறவு முறைகளாகும். நல்ல உறவுகள் நமது வாழ்வைத் தாங்கிப் பிடிக்கும் தூண்கள் எனலாம். மனித உறவுகள் விலைமதிப்பற்றவை. ஆகவே கவனமாகச் செயல்பட வேண்டும். உறவுகளை இணைப்பதற்காகவே பலதரப்பட்ட கலைகளும் பண்பாடுகளும் தோன்றியுள்ளன. இவற்றின் வாயிலாக உறவுகள் வலுவடைவதுடன் உடைந்த உறவுகள் ஒன்றிணையவும் செய்கின்றன. உறவுகளை இணைக்கும் வகையில் முன்னோர்கள் பல்வேறு திருவிழாக்களைக் கொண்டாடி வந்தனர். இதனால் உழைக்கும் மக்களின் வாழ்வில் துன்பம் நீங்கி இன்பமும் மகிழ்ச்சியும் புத்துணர்வும் அடையமுடிகின்றது. திருவிழாக்காலங்களில் மக்களை மகிழ்விப்பதற்கென்று கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதும் உண்டு. அவ்வகையில் நாமும் பொங்கல், ஓணம், தீபாவளி, இரம்சான், கிறிஸ்துமஸ் முதலிய பண்டிகைகளைக் கொண்டாடி மகிழ்கிறோம். அறுசுவை உணவு சமைத்து நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் கூடி மகிழ்கிறோம். ஒவ்வொரு விழாவிற்கும் ஒரு தனித்தன்மை உண்டு. இக்கருத்துகளை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பொங்கலோ பொங்கல், ஆவணியும் பூவணியும், சிரிக்கும் மத்தாப்பு எனும் துணை அலகுகள் அமைந்துள்ளன. அவ்வலகுகளுக்குச் சிறப்பூட்டும் வகையில் கவிதைகள், படக்கதைகள், கட்டுரைகள், கதைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த அலகில் உள்ள பாடப்பகுதிகளுக்குச் சுமார் 30 பிரிவேளைகள் தேவைப்படலாம்.

| கரு | துணைக்கரு | இலக்கிய வடிவங்கள் | கற்றல் நோக்குகள் | | | மொழிக் கூறுகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்துகள் | திறன்கள் | மனப்பான்மைகள் | | | |
| கலையும் பண்பாடும் | பொங்கல் | கவிதை<br><br>படக்கதை<br><br>குறிப்பு | பொங்கல் தமிழர் திருநாள் ஆகும்<br><br>பொங்கல் தை மாதம் கொண்டாடப்படு கிறது<br><br>பொங்கல் அறுவடைத் திருநாள் ஆகும்<br><br>கதிரவனுக்கும் கால்நடைக்கும் நன்றி தெரிவிக்கும் விழா | பாடலை மெட்டமைத்துப் பாடுதல்<br><br>கதையை வாசித்துக் கருத்துகளைக் கூறுதல்<br><br>வினாக்களுக்கு விடை எழுதுதல்<br><br>கதையை வாசித்து மையக்கருத்தைக் கூறுதல்<br><br>பொங்கல் செய்முறைக் குறிப்பாக எழுதுதல்<br><br>விழாக்களின் பெயர்களைப் பாடப்பகுதியை வாசித்து எழுதுதல்<br><br>பொங்கல் கொண்டாடுவதன் நோக்கம் கூறுதல் | நமது தேசிய விழாக்களின் மேன்மைகளைப் புரிந்து கொண்டு விழாக்களைக் கொண்டாடும் மனநிலை | முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்கள்<br><br>இரண்டாவது எழுத்து ஒன்று போல் வரும் சொற்கள்<br><br>பாடலைச் சரியான உச்சரிப்புடன் பாடுதல்<br><br>அகரவரிசை படுத்துதல்<br><br>இணையான சொற்கள்<br><br>சொற்களைப் பிரித்துச் சேர்த்து எழுதுதல்<br><br>தொடர்கள் அமைத்தல்<br><br>புதிய சொற்கள் | பாடலுக்கு மெட்டமைத்துப் பாடுதல்<br><br>கருத்துகளைக் கூறுதல்<br><br>வினாக்களுக்கு விடை காணுதல்<br><br>கதையை வாசித்து மையக்கருத்தைக் கூறுதல்<br><br>நடித்துக் காட்டுதல்<br><br>செய்முறை குறிப்பு எழுதுதல் | மதிப்பீட்டுக் குறிப்பின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும். தனிநபர்/ குழு/ ஆசிரியர் மதிப்பீடு |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓணம் | கவிதை<br>விளக்கக்<br>குறிப்புக்<br>கட்டுரை | ஓணம்<br>கேரளாவில்<br>கொண்டாடப்படும்<br>விழா<br><br>ஓணவிழாவின்<br>போது மஹாபலி<br>அரசன் வருவதாக<br>ஐதீகம்<br><br>ஓணவிழாக்<br>காலத்தில்<br>பூக்களால்<br>கோலமிடுவர்<br><br>ஓணத்தின்போது<br>தும்பி துள்ளல்<br>நடைபெறும் | திருக்குறளைக்<br>கண்டறிந்து<br>எழுதுதல்<br><br>பண்டிகைக்கான<br>வாழ்த்து<br>அட்டைகள் தயார்<br>செய்கின்றார்கள்<br><br>வாக்கியத்தில்<br>அமைத்துத் தொடர்<br>எழுதுகிறார்கள் | விழாக்கள் மனித<br>வாழ்வியலுடன்<br>தொடர்புடையவை<br>என்ற மனநிலை | | திருக்குறளைக்<br>கண்டு கூறுதல்<br><br>விழா ஏற்பாடுகள்<br>எழுதுதல்<br><br>வாழ்த்து அட்டை<br>தயாரித்தல்<br><br>வாக்கியத்தொடர்<br>அமைத்தல் | |
| | தீபாவளி | கவிதை<br>கதை | தீபாவளி தேசிய<br>பண்டிகையாகும்.<br>மக்கள் தீபாவளித்<br>திருநாளாகக்<br>கொண்டாடு<br>கின்றனர்.<br>விழாக்களும்<br>பண்டிகைகளும்<br>மகிழ்ச்சியையும்<br>உற்சாகத்தையும்<br>தருகின்றன.<br>புத்தாடை<br>அணிந்தும்<br>பட்டாசு வெடித்தும்<br>மகிழ்ச்சியைப்<br>பகிர்ந்து<br>கொள்ளலாம். | கவிதையை இராக,<br>தாளத்துடன் பாடுதல்<br>விருப்பமான<br>வரிகளைக் கூறுதல்<br>கலந்துரையாடிக்<br>கருத்துகளைக் கூறுதல்<br>சொற்கள் அமைத்தல்<br>விடை காணுதல்<br>பாடப்பகுதியை<br>வாசித்துக்<br>கருத்துகளைக் கூறுதல்<br>கதைக் கூறுதல்<br>பாடப்பகுதியை<br>வாசித்துக்<br>கருத்துகளைக் கூறுதல்<br>நடித்தல்<br>வினாக்களுக்கு விடை<br>காணுதல் | இயற்கையையும்<br>உயிரினங்களையும்<br>போற்ற வேண்டும் | | மெட்டமைத்துப்<br>பாடுதல்<br><br>கருத்துகளைக்<br>கூறுதல்<br><br>நாடகம் நடித்தல்<br><br>கதைச் சொல்லுதல்<br><br>வினாக்களுக்கு<br>விடை காணுதல் | |

## கற்றல் இலக்குகள்

- வாசிப்புப் பகுதியை வாசித்துக் கருத்தைப் புரிந்து கொள்கிறார்கள்
- பாடலை மெட்டமைத்துப் பாடுகிறார்கள்
- மொழிச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்
- திருவிழா தொடர்பான வாழ்த்து அட்டைகள் தயாரித்து வெளியிடுகிறார்கள்
- பாடலை வாசித்துக் கருத்துகளை வெளியிடுகிறார்கள்
- புதிய சொற்களைக் கண்டறிந்து எழுதுகிறார்கள்
- கதைப்பகுதியை வாசித்து நடித்துக் காண்பிக்கிறார்கள்
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிகிறார்கள்
- கதைப்பகுதியை வாசித்துக் கருத்துகளைக் கூறுகிறார்கள்
- வாசிப்புப் பகுதியை வாசித்து நிறுத்தற்குறியீடுகளைப் பயன்படுத்துகிறார்கள்
- புதிய சொற்களைப் பயன்படுத்தி (கண்டறிந்து) புதிய சொற்றொடர்களை (வாக்கியங்களை) உருவாக்குகிறார்கள்.
- தேசிய விழாக்களின் சிறப்புகளைப் புரிந்துகொள்கிறார்கள்
- திருவிழாக்கள் மனித வாழ்வியலுடன் தொடர்புடையவை என்பதை அறிந்து கொள்கிறார்கள்
- இயற்கை, உயிரினங்கள் இவற்றை நேசிக்கவும் போற்றவும் வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்கிறார்கள்.

## கற்றல் கருவிகள்

- ❖ பொங்கல், ஓணம், தீபாவளி திருவிழாக்கள் தொடர்பான படங்கள்
- ❖ திருவிழாக்கள் தொடர்பானக் கதைகள், பாடல்கள் தொகுப்புகள்
- ❖ விழாக்கள் தொடர்பானக் காணொளிக் காட்சிகள்
- ❖ நூலகப் புத்தகங்கள்
- ❖ உச்சரிப்புத் தொடர்பானக் காணொளிக் காட்சிகள்

## நுழைவுச் செயல்பாடு

ஆசிரியர் சார்ட்டில் திருவிழாக்களின் படங்களை ஒட்டித் தொங்கவிடுதல். பின்பு திருவிழா தொடர்பான படங்களை மேசையின் மீது எடுக்கச் செய்தல் (எண்ணிக்கைக்கு ஏற்றார் போல் படங்கள் இருத்தல்) தங்களுக்குக் கிடைத்த படங்களின் அடிப்படையில் குழுவாகுதல். பின்பு படங்களைப் பார்த்துத் தங்களுக்குத் தெரிந்த கருத்துகளைக் கூறச் செய்தல். (பொங்கல், தீபாவளி, ஓணம் தொடர்பானப் படங்கள்) பின்பு நமது பாடப்பகுதியிலுள்ள கருத்துப் படத்தைப் பார்த்துக் கருத்துகளைக் கூறச் செய்தல். மேலும் குழந்தைகள் தங்கள் பகுதியில் கொண்டாடப்படும் விழாக்களைக் குறித்துக் கூறச் செய்தல்.

குழந்தைகளுக்குத் திருவிழாக்கள் கொண்டாடுவது உறவுகளின் மூலம் ஒற்றுமையை ஏற்படுத்துவதும் மக்களிடையே பாகுபாடுகள் இன்றி மகிழ்ச்சியாக வாழ்வதற்காகத்தான் என்று கூறி பாடப்பகுதிக்குள் நுழைதல். 'பொங்கலோ................ பொங்கல்' என்ற தலைப்பின் கீழ்வரும் "கதிரவனின் பொங்கல்" என்ற கவிதையைச் சார்ட்டில் எழுதித் தொங்கவிடுதல்.

## கதிரவனின் பொங்கல்

### செயல்பாடுகள்

**பாடலுக்கு மெட்டமைத்துப்பாடுங்கள்**

- கவிதையை ஆசிரியர் இரண்டோ, மூன்றோ முறை சரியான உச்சரிப்புடன் வாசித்துக் காண்பித்தல்.
- ஆசிரியர் வாசிக்கும்போது குழந்தைகளும் சேர்ந்து கூறச் செய்தல்.
- ஏற்கனவே குழுவாக இருக்கும் குழந்தைகளிடம் புதிய இராகம் அமைத்துக் குழுவாகப் பாடச் செய்தல்.
- புதிய இராகம் அமைத்துப் பாடிய குழுவைப் பாராட்டுதல்
- ஆசிரியர் வேறு இராகத்தில் பாடிக் காண்பித்தல்
- குழுவில் கவிதையின் கருத்தைக் கலந்துரையாடச் செய்தல்
- மாணவர்களிடம் கருத்துகளைக் கூறச் செய்தல்
- கூறிய கருத்துகளைச் சார்ட்டில் வரிசைப்படுத்துதல்
- மாணவர்களுக்கு அவற்றைத் தனித்தனியாக வாசிப்பதற்கு வாய்ப்பளித்தல்
- வாசித்த கருத்துகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்தல்

### தொடர் செயல்பாடு

- திருவிழாக்கள் தொடர்பான படங்களைச் சேகரித்துத் தொகுப்பாக்குதல்

**பாடலை வாசித்துப் பொங்கலைப் பற்றிக் கூறுங்கள்**

- 'கதிரவனின் பொங்கல்' என்ற கவிதையை ஒருமுறைகூட சத்தமாகவும் இராகத்துடனும் பாடுதல்.
- பின்பு மேசையின் மீது ஒவ்வொரு பாடல் வரிகளையும் தனித்தனியே எழுதி வைத்து ஒவ்வொருவராக எடுக்கச் செய்தல்
- எடுத்த வரிகளைத் தனித்தனியாக வாசித்தல்
- பின்பு அதன் கருத்தைக் கூறுதல்.
- தொடர்ந்து புத்தகத்தில் உள்ள கவிதையைப் பார்த்து நான்கு வரிகள் சேர்த்துக் குழுவாக்குதல்
- குழுவானவுடன் மீண்டும் வாசித்தல்
- நான்கு வரிகளின் கருத்தைக் கூறுதல்
- இவ்வாறு ஒவ்வொரு குழுவையும் கூறச் செய்தல்
- ஆசிரியர் ஒருங்கிணைத்துச் சார்ட்டில் எழுதுதல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- குழுச்செயல்பாடுகளில் ஈடுபடுதல்
- கருத்துகளைத் தெளிவுடன் கூறுதல்
- கருத்துத் தெளிவுடன் வாசித்தல்

**பாடலை வாசித்துப் பொங்கலின் வகைகளை வரிசைபடுத்துங்கள்.**

- பொங்கலின் வகைகளை வரிசைப்படுத்த மீண்டும் மீண்டும் கவிதையை வாசிக்கச் செய்தல்
- வாசித்த கவிதையின் கருத்தைக் கூறச் செய்தல்
- பொங்கலின் பெயர்கள் எழுதிய துண்டுச் சீட்டுகளை வழங்குதல்
- பாடப்பகுதியில் வரும் பொங்கல் வகைகளை வரிசைப்படுத்துதல்.
- வரிசைப்படுத்தியதைக் கூறச் செய்தல்
- வரிசைப்படுத்தியதில் சரியான வரிசை இல்லையென்றால் மீண்டும் கவிதையை வாசிக்க வாய்ப்பு கொடுத்தல்
- மீண்டும் ஒருமுறை வரிசைபடுத்துதல்
- வரிசைப்படுத்தியதைப் பதிவு செய்தல்

# வாணியும் கீதாவும் (படக்கதை)

## செயல்பாடுகள்

**கதையை வாசித்து மையக் கருத்தைக் கூறுங்கள்**

- படக்கதையை இரண்டோ, மூன்றோ முறைகள் மௌனமாக குழந்தைகளை வாசிக்கச் செய்தல்
- மீண்டும் சத்தமாக வாசிக்கச் செய்தல்/ தனித்தனியாக
- குழுப்பிரித்தல்
- குழுவாகச் சேர்ந்து படக்கதையைக் கலந்துரையாடச் செய்தல்
- கருத்துகளைக் குழுவில் கூறச் செய்தல்
- கருத்துகளை மேம்படுத்துதல்
- கருத்துகளை வகுப்பில் வெளியிடுதல்
- பிற குழுக்கள் மதிப்பிடுதல்
- ஆசிரியர் எழுதிய கருத்துகளை வெளியிடுதல்
- மையக் கருத்தைக் கண்டறிதல்
- பின்தங்கிய குழந்தைகளுக்கு உதவுதல்
- மேம்படுத்துதல் (குழந்தைகள்)
- தனது குறிப்பேட்டில் பதிவு செய்தல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கருத்துகளைத் தெளிவாகப் புரிந்துள்ளனர்.
- மையக் கருத்தைக் கண்டறிந்தனர்.

**கதையில் வரும் கதாபாத்திரங்களை எழுதுங்கள்**

- படக்கதையை வாசிக்க வாய்ப்புகள் கொடுத்தல் (மௌனமாக /சத்தமாக)
- ஆசிரியர் ஓரிருமுறை வாசித்தல்
- பின்பு குழந்தைகளை மீண்டும் வாசிக்கச் செய்தல்
- வாசித்த பின்பு கருத்துகளைக் கூறச் செய்தல்
- கதையில் வரும் கதாபாத்திரங்களைக் கூறச் செய்தல்
- கூறிய கதாபாத்திரங்களை ஆசிரியர் அட்டவணை செய்தல்
- ஆசிரியர் அவற்றை வாசித்துக் காண்பித்தல்
- ஆசிரியர் எழுதிய சார்ட்டை வெளியிடுதல்
- மேம்படுத்தி குறிப்பேட்டில் எழுதுதல் வரிசைப்படுத்துதல்

- கதையை வாசித்து நடித்துக் காட்டுங்கள்
- குழந்தைகளிடம் படக்கதையை வாசிக்கச் செய்தல்
- வாசித்த பின் கதாபாத்திரங்களை வரிசைப்படுத்தச் செய்தல்
- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- தங்களுக்குரிய கதாபாத்திரத்தைத் தேர்வு செய்தல்
- பாடப்பகுதியிலுள்ள கதையில் வரும் நிகழ்ச்சிகளை நடிக்கச் செய்தல்
- ஒத்திகைக்கு சிறிது நேரம் ஒதுக்குதல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- தங்களுக்குரிய கதைப் பகுதியை நன்கு வாசித்துப் புரிந்துகொள்ளுதல்
- ஒவ்வொரு குழுவும் வகுப்பில் நடித்துக் காட்டுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- நன்றாக நடித்தவர்களைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- கதைப் பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளனர்
- கதைப் பகுதியை நன்கு புரிந்துள்ளனர்
- நல்ல உச்சரிப்புடன் உரையாடினர்

**பொங்கல் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் என்னென்ன என்பதை எழுதுங்கள்**

- படக்கதையை வாசிக்கச் செய்தல்
- படக்கதையில் பொங்கல் தயாரிப்பதற்கானப் பொருட்களைப் பட்டியலிடுதல்
- எழுதிய பின் வகுப்பில் கலந்துரையாடுதல்
- கலந்துரையாடிக் கூறுதல்; சேர்க்க வேண்டிய பொருட்களை எழுதுதல்
- எழுதியதை வாசித்தல்
- பின்பு ஆசிரியர் படைப்பை வெளியிடுதல்
- குழந்தைகள் மேம்படுத்தி எழுதுதல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

**பொங்கல் தயார் செய்யும் முறையை வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டு எழுதி வாருங்கள்**

- குழந்தைகளைப் பெற்றோர்களிடம் கேட்டு எழுதி வரச் செய்தல்
- எழுதி வந்ததைக் குழுவாகச் சேர்ந்து கலந்துரையாட வாய்ப்பு கொடுத்தல்
- குழுவில் மேம்படுத்துதல்
- மேம்படுத்தியதை வாசிக்கச் செய்தல்
- வாசித்தவற்றை ஆசிரியர் சார்ட் செய்தல்
- பின்பு அவற்றை வாசிக்க வாய்ப்பு கொடுத்தல்
- குழந்தைகள் வாசிக்க அவர்களோடு சேர்ந்து பொங்கல் வைப்பதை வரிசைப்படுத்தி எழுதுதல்
- எழுதியதைக் குழந்தைகள் பதிவு செய்தல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- பொங்கல் வைக்கும் முறை விளக்கப்பட்டுள்ளது
- வாக்கிய அமைப்புகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

## தொடர் செயல்பாடு

- தனித்தாளில் வண்ணம் தீட்டி எழுதிக்கொண்டு வந்து தனது தொகுப்பில் சேர்த்தல்

# தமிழர் திருநாள்

## செயல்பாடுகள்

**நீங்கள் கொண்டாடி மகிழும் விழாக்களின் பெயர்களைக் கூறுங்கள்**

- குழந்தைகளிடம் திருவிழாக்களின் பெயர்களைக் கூறச் செய்தல்
- பின்பு ஒவ்வொருவராக துண்டுச் சீட்டை எடுத்தல்
- தங்களுக்கு எந்தத் திருவிழா கிடைத்துள்ளது என்பதை மௌனமாக வாசித்தல்
- தன்னுடைய நண்பன் யார் என்பதைக் கண்டறிதல் (தனக்கு வந்த அதே திருவிழாவின் பெயர் யாருக்கு வந்துள்ளது என்பதாகும்)
- சத்தமாக வாசித்தல்
- அவற்றைத் தங்களது குறிப்பேட்டில் எழுதுதல்
- மற்ற நண்பர்களுக்கு வந்த திருவிழாவின் பெயர்களைக் கேட்டுப் பதிவு செய்தல்.

**பொங்கல் கொண்டாடுவதின் நோக்கங்களை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்.**

- உரைநடைப் பகுதியை மௌனமாக வாசிக்கச் செய்தல்
- பின்பு சத்தமாக வாசித்தல்
- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் கலந்துரையாடி வாசித்தல்
- இரண்டு மூன்று முறை வாசித்தல்
- வாசித்த பின் கருத்துகளைக் கூறச் செய்தல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- குழுக்கள் மேம்படுத்திக் கூறுதல்
- குழுக்கள் கூறிய கருத்துகளை ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- தேவைப்படும் இடங்களில் ஆசிரியர் உதவுதல்
- கூறிய கருத்துகளை வரிசைபடுத்துதல் (ஆசிரியர்)
- வரிசைப்படுத்தியதைக் குழந்தைகள் பதிவு செய்தல் / வாசித்தல்
- தொகுப்பில் சேர்த்தல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- தவறின்றி சரளமாக வாசித்தல்
- தகுந்த உச்சரிப்புடன் வாசித்தல்
- உரைநடைப்பகுதியின் கருத்தைச் சரியாகக் கூறுதல்

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நீங்கள் வீடுகளில் செய்யும் செயல்களைப் பாடப்பகுதியில் இருந்து எடுத்து எழுதுங்கள்**

- குழந்தைகளிடம் தனித்தனியாக மௌனமாக வாசிக்கச் சொல்லுதல்
- வாசித்த பின் வாசிப்புப் பகுதியைப் புரிந்துள்ளனரா? என அறிய இரண்டோ, மூன்றோ கேள்விகள் கேட்டல்

1. பொங்கல் திருவிழா எத்தனை நாட்கள் கொண்டாடப்படுகிறது?
   நான்கு நாட்கள்
2. கடைசியாகக் கொண்டாடப்படும் பொங்கல் எது?
   காணும் பொங்கல்
3. பொங்கல் தயாரானவுடன் யாருக்கு நன்றி கூறுவர்?
   சூரியனுக்கு நன்றி கூறுவர்

- பின்பு சத்தமாக வாசிக்க இரண்டோ மூன்றோ நபருக்கு வாய்ப்பளித்தல்.
- குழுவாக்கிக் கலந்துரையாடி எழுதச் செய்தல் / வாசித்தல்
- குழந்தைகள் கூறிய செயல்வரிசையை ஆசிரியர் சார்ட் செய்தல்
- ஆசிரியர் ஈடுபட்டு வரிசையை முறைப்படுத்துதல் (வரிசை சரியாக இல்லாவிடில் மட்டும்)
- குறிப்பேட்டில் பதிவு செய்தல், தொகுப்பில் சேர்த்தல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- செயல் வரிசையைச் சரியாகக் கண்டறிந்தனர்.
- வினாக்களுக்குச் சரியாகப் பதில் கூறினர்.

**உழவர்களின் சிறப்பினைக் கூறும் திருக்குறளைக் குறிப்பிடுங்கள்**

- இந்தச் செயல்பாடு பள்ளி நூலகத்தைப் பயன்படுத்துவதற்கானது
- நூலகத்திலிருந்து திருக்குறள் புத்தகத்தை எடுத்து வழங்குதல்
- உழவர் சிறப்பினைக் கூறும் குறள் பகுதியைக் கண்டறிதல்
- வாசிக்கச் செய்தல்
- ஒவ்வொரு குறளுக்கும் ஏழு சொற்கள் உள்ளன எனவும் அதில் முதல் வரிசையில் நான்கு சொற்களும், இரண்டாவது வரிசையில் மூன்று சொற்களும் இருக்கும் என்பதையும் மாணவர்களுக்குக் கூறுதல்

  எ.கா : குறள் ஒன்றை எழுதிக் காண்பித்து விளக்குதல்

- வரிசை சரியாக வருவதற்கு இரண்டு, மூன்று வாய்ப்புகள் கொடுத்தல்
- ஆசிரியர் சார்ட்டில் எழுதி தொங்கவிடுதல் (விளக்கத்தையும்)
- குழந்தைகள் நன்கு வாசித்த பின்பு நோட்புக்கில்/குறிப்பேட்டில் பதிவு செய்தல்.

**தமிழர் திருநாளுக்கு நண்பனை வாழ்த்த வாழ்த்து அட்டை தயார் செய்யுங்கள்**

- வாழ்த்து அட்டை என்றால் என்ன? கலந்துரையாடுதல்
- வாழ்த்து அட்டையில் என்னென்ன அடங்கி உள்ளன? விளக்குதல் வாழ்த்து அட்டை மாதிரியைக் காண்பித்தல்
- உற்றுக் கவனிக்கச் சொல்லுதல்
- பின்பு அதில் உள்ள அம்சங்களை எழுதச் செய்தல்,
- இதே போன்று நண்பனுக்குப் பொங்கல் பற்றிய வாழ்த்து அட்டை தயாரிக்கக் கூறுதல்

- வாசிக்கச் செய்தல்
- குழுவாகக் கலந்துரையாடி வெளியிடுதல்
- ஆசிரியர் பதிவு செய்தல்
- பின்பு ஆசிரியர் வெளியீடு மாதிரி காண்பித்தல்
- மாணவர்களை வாசிக்கச் செய்தல்
- பல வாழ்த்து மடல்கள் எழுதிய சார்ட் காண்பித்தல்
- மாணவர்களைத் தனித்தனியாக வாழ்த்து அட்டை தயாரிக்கச் செய்தல்
- ஆசிரியர் மதிப்பிடுதல்
- மாணவர் தொகுப்பில் சேர்த்தல்

**வாழ்த்து அட்டை மாதிரி**



### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- வாழ்த்து அட்டையில் அடங்கியுள்ளவற்றைப் புரிந்து கொண்டனர்
- வாழ்த்து அட்டையை உருவாக்கினர்
- வாழ்த்து அட்டையில் அனைத்துக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன.

**கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்குச் சரியான தொடர் அமையுங்கள்**

- பாடப்பகுதியைத் தனித்தனியாக மௌனமாக வாசித்தல்
- பின்பு ஆசிரியர் சத்தமாக ஓரிருமுறை வாசித்தல்
- செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கண்டறியச் செய்தல்
- சொற்றொடர்களை வாசித்தல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- வாசித்த சொற்றொடர்களைத் தங்களது குறிப்பேட்டில் எழுதுதல்
- எழுதியபின் மீண்டும் வாசிக்கச் செய்தல்
- சரியான சொற்றொடர்களை ஆசிரியர் சார்ட்டிலோ கரும்பலகையிலோ எழுதுதல்
- மாணவர்கள் மேம்படுத்துதல்
- குறிப்பேட்டில் பதிவு செய்து வெளியிடுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- தொடர்களின் அமைப்பைப் புரிந்துள்ளனர்
- தொடர்கள் சரியாக எழுதப்பட்டது
- புதிய தொடர்கள் அமைத்துள்ளனர்

## ஆவணியும் பூவணியும்

- ஆசிரியர் பாடப்பகுதிக்குள் செல்லும் முன் நமது மாநிலத்தில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் எவை? கூறுங்கள்
- ஆசிரியர் சார்ட் செய்தல்
- இவற்றில் எல்லா சமூக மக்களும் கொண்டாடும் திருவிழா எது?

- கலந்துரையாடுதல்
- சரியான பதில் வரவில்லை என்றால், குழந்தைகளின் கையில் திருவிழாக்களின் பெயர் எழுதிய துண்டுச்சீட்டு கொடுத்தல் (ஓணம், பொங்கல், தீபாவளி,......................)
- அவற்றைப் பற்றிச் சில கேள்விகள் கேட்டல்
- கிறிஸ்துமஸ் எப்போது கொண்டாடப்படும்?
- தீபாவளி கொண்டாடும்போது என்னென்ன செய்வார்கள்?
- அறுவடைப் பண்டிகை எது?
- இந்தத் துண்டுச் சீட்டில் சரியான பதில் வரும்படியான கேள்விக்குரிய பதில் எழுத வேண்டும். (நமது தேசிய விழா ஓணம்)
- நமது தேசிய விழா எது? என்ற வினா கேட்கும் போது ஓணம் எனத் துண்டுச்சீட்டுக் கிடைத்தவர்கள் கூறுவார்கள். பின்பு ஓணத்தைப் பற்றிக் கலந்துரையாடுதல். நாம் அவற்றைப் பற்றிக் கூடுதல் அறிந்துகொள்ள பாடப்பகுதியிலுள்ள கவிதையை வாசிப்போமா என்று கூறி அறிமுகம் செய்தல்

## செயல்பாடுகள்

### கவிதையை இராக தாளத்துடன் பாடுங்கள்

- குழந்தைகள் கவிதையை மௌனமாக வாசித்தல்
- ஓரிரு முறை வாசித்தல்
- உரக்க வாசித்தல்
- ஆசிரியர் வாசித்துக் காட்டுதல்
- குழந்தைகள் தனியாகப் பாடுதல்
- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழந்தைகள் குழுவில் மெட்டமைத்துப்பாடுதல்
- ஆசிரியர் பாடிக்காட்டுதல்
- குழுக்கள் வகுப்பில் பாடிக்காட்டுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- குழுவில் மேம்படுத்திப் பாடுதல்
- நன்றாகப் பாடிய குழுவைப் பாராட்டுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- அனைவரும் பங்கு கொண்டனர்
- நன்றாக மெட்டமைத்துப் பாடினர்
- நல்ல உச்சரிப்புடன் பாடினர்

### பாடலை வாசித்து உங்களுக்குப் பிடித்த வரிகளைக் கூறுங்கள்

- குழந்தைகள் ஒவ்வொரு வரியாக இரண்டோ மூன்றோ முறை மௌனமாக வாசித்தல்
- கவிதையின் வரியினைச் சத்தமாக வாசிக்கச் செய்தல்
- தனக்கு மிகவும் பிடித்த வரிகளை அடையாளப்படுத்துதல்
- பிடித்த வரிகளைத் தனது குறிப்பேட்டில் எழுதுதல்
- வகுப்பில் வாசிக்கச் செய்தல் காரணம் கூறச் செய்தல்
- பிற மாணவர்களைக் கவனிக்கச் செய்தல்
- தனக்குப் பிடித்த வரிகள் வேறு யார் யாருக்குப் பிடித்துள்ளது? என்றும் கண்டறிதல்
- அனைத்து மாணவர்களும் தங்களுக்குப் பிடித்த வரிகள் கூறுவதை உறுதி செய்தல்

### திருவோணத்தைப் பற்றிக் கலந்துரையாடிக் கருத்துகளைக் கூறுங்கள்

- குழந்தைகள் கவிதையை மௌனமாக வாசிக்கச் செய்தல்
- ஆசிரியர் கவிதை வரிகளைத் தனித்தனி உரைநடை வாக்கியமாக துண்டுச் சீட்டில் எழுதுதல்

கருத்து : ஓணப்பண்டிகையைத் திருவோணம் என்பர்.

இப்பண்டிகை கொண்டாடுவதன் மூலம் ஒவ்வொருவரின் உள்ளமும் மகிழ்கிறது.

எ.கா : ஓணம் ஓணம் திருவோணம்
உள்ளம் மகிழும் திருவோணம்

- தனக்குக் கிடைத்த வரிகளை வாசித்தல்
- கவிதை வரிகளின் கருத்துகளைக் கண்டறிந்து வெளியிடல்
- பிறர் மதிப்பிடுதல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- குழந்தைகள் மேம்படுத்தி வெளியிடல்
- ஆசிரியர் ஒருங்கிணைத்துக் கரும்பலகையில் எழுதுதல்
- குழந்தைகள் பதிவேட்டில் எழுதுதல்

### எழுத்துகளை ஒழுங்குபடுத்திச் சொற்கள் அமையுங்கள்

- வரிசைமாற்றிக் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை நன்கு வாசித்தல்

- சரியான சொற்களைக் கண்டறிந்து எழுதுதல்
- கண்டறிய சிரமம் என்றால் பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்
- சரியான சொற்களைக் கண்டறிதல்/ எழுதுதல்
- பின் தங்கிய மாணவர்களுக்கு ஆசிரியர் உதவுதல்

ஓணம்
ஊஞ்சல்
திருவோணம்
அத்தம்

வேறு சொற்களையும் கூடுதல் செயல்பாடாகக் கொடுத்தல்

**வண்ண நிறத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் 'ஐ' சேர்த்து வாக்கியங்கள் எழுதுங்கள்**

- செயல்பாட்டுப் பகுதியை நன்றாக வாசித்தல்
- தங்களுக்குப் புரிந்த சொற்களைக் கூறச் செய்தல்
- வண்ண சொற்களைத் தனியாக வாசிக்கச் செய்தல்
- வண்ண சொற்களுடன் 'ஐ' சேர்த்துக் கூறச் செய்தல்
- மேம்படுத்தி வாசிக்கச் செய்தல்
- தவறுகளைச் சரி செய்தல்
- ஆசிரியர் உதவுதல்
- ஆசிரியர் வெளியீடு காண்பித்தல்
- குழந்தைகள் மேம்படுத்துதல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

ஓண விழாவை
பூக்களை
பூக்கோலத்தை
கோலத்தை
விளையாட்டை
விருந்தை
மகிழ்ச்சியை

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- வண்ண சொற்களை அடையாளம் கண்டுள்ளனர்
- 'ஐ' சேர்த்துச் சொற்களை எழுதியுள்ளனர்

## பூக்களின் திருவிழா

**குழந்தைகளிடம் பாடப்பகுதியை மீண்டும் மீண்டும் வாசிக்க பலவிதமான உத்திகளைக் கையாளுதல்**

1. மீண்டும் மீண்டும் வரக்கூடிய சொற்களைக் கண்டறிதல்
2. அகர வரிசை சொற்கள்
   (அ முதல் ஔ ) க – கௌ , ச – சௌ
3. நெடில், குறில் சொற்களைக் கண்டறிதல், எழுதுதல்
4. ர்–இல் முடியும் சொற்களைக் கண்டறிதல் – எழுதுதல்

### செயல்பாடுகள்

**பாடப்பகுதியை வாசித்து ஓணம் பற்றிய கருத்துகளைக் கூறுங்கள்**

- பல வாசிப்புத் தந்திரங்களைப் பயன்படுத்தி வாசிக்கச் செய்தல்.
- ஒருமுறை முழுமையாக வாசித்தல்
- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவின் கருத்துகளை மேம்படுத்துதல்
- வகுப்பில் கூறுதல்
- பிற குழுக்கள் மதிப்பிடல்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- மீண்டும் குழந்தைகளை வாசிக்கச் செய்தல்
- குழுவில் கருத்துகளை வெளியிடல்

**ஓணம் தொடர்பான கதையைச் சொல்லுங்கள்**

- குழந்தைகளிடம் பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்
- கதையில் வரும் கதாபாத்திரங்களைக் கண்டறிந்து சொல்லுதல்
- சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துத் தனியாக வாசிக்கச் செய்தல்
- அப்பகுதியில் வரும் கதை நிகழ்வைக் கூறச் செய்தல்

- கூறிய கதைப் பகுதிகளை வரிசைப்படுத்துதல்
- கதையை முழுமையாகக் கூறச் செய்தல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- கதையை ஆசிரியர் முழுமைபடுத்திக் கூறுதல்
- மாணவர்களையும் கூறச் செய்தல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- கதைப் பகுதிகளை நன்கு வாசித்தனர்
- கதை நிகழ்வுகளைக் கூறினர்
- கதையை முழுமையாகக் கூறினர்

**மகாபலி அரசன் ஆண்டுதோறும் மக்களைக் காணவரும் காரணத்தை எழுதுங்கள்.**

- ஆசிரியர் பாடப்பகுதியின் இறுதி பகுதியைத் தனி தனியாக துண்டுச்சீட்டில் எழுதிக் கொடுத்தல்
- குழந்தைகள் வாசித்தல்
- வாசித்த கருத்துகளை வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- குழந்தைகள் வாசித்தல்
- அனைத்துக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன என்பதை உறுதி செய்தல்

**பாடப்பகுதியை வாசித்து நிரப்புங்கள்**

- பாடப்பகுதியை நன்றாக இரண்டோ, மூன்றோ முறை வாசிக்கச் செய்தல்
- ஆசிரியர், மாணவர்கள் வாசிக்கிறார்களா? என உறுதி செய்தல்
- செயல்பாட்டை வாசிக்கச் செய்து ஒவ்வொன்றின் விடையையும் கண்டறியச் செய்தல்
- எழுதியதை வாசிக்கச் செய்தல்
- பிறர் மதிப்பீடு செய்தல்
- சரியாகப் பூர்த்திச் செய்துள்ளார்களா என உறுதி செய்தல்
- வகுப்பில் மேம்படுத்த வாய்ப்புகள் கொடுத்தல்
- மேம்படுத்தியதை ஒரு முறை வாசித்தல்

வசந்த கால பண்டிகை
மகாபலி
திருவிழாக் காலம்
திருவோணம்

**கொடுத்திருக்கும் சொற்களில் முதல் எழுத்தை மாற்றி புதிய சொற்களைக் கண்டறியுங்கள்**

- ஆசிரியர் "சொல் ஏணி " என்ற துணை கருவியைத் தயார் செய்தல்
- குழந்தைகளிடம் நாம் இன்று புதிய சொற்களைக் கண்டறியப் போகிறோம் என்று கூறிச் சொல் ஏணி அறிமுகம் செய்தல்

| | |
|---|---|
| கி<br>தி ண்ணம்<br>வ | க ன்னம்<br>பி |

- இதே போன்று உருவாக்கி ஒவ்வொரு எழுத்தாக வைத்து வாசிக்கச் செய்தல்
- வாசித்த சொற்களைப் பதிவு செய்தல்
- இதே போன்று நமது பாடப்பகுதியிலும் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்குக் கீழே தனித்தனி எழுத்துகளும் கொடுக்கப்பட்டுள்ளன.
- அவற்றைப் பயன்படுத்தி புதிய சொற்கள் கண்டுபிடிக்கக் கூறுதல்
- தனித்தனியே கண்டறிந்ததை வாசிக்கச் செய்தல்
- பிறர் மதிப்பீடு செய்தல்
- குழந்தைகள் கூறுவதை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- அவற்றை வாசித்து மேம்படுத்துதல்
- குறிப்பேட்டில் பதிவு செய்தல்

எ.கா:

- கொண்டாட்டம்
- திண்டாட்டம்
- திண்ணம்
- பெருவிழா
- இருமுறை
- மாக்கோலம்
- இல்லை
- பாதம்
- கொண்டுவந்தான்
- மாலை, அலை
- பாம்பை
- பாலை

**என்னைச் சேர்த்தால் பொருள் தருவேன்**

- செயல்பாட்டுப் பகுதியில் பிரித்துத் தரப்பட்டுள்ள சொற்களைத் தனித்தனியாகக் குழந்தைகளுக்குக் கொடுத்தல்
- வாசிக்கச் செய்தல்
- வாசித்த பின் ஒவ்வொருவராகச் சேர்ந்து சரியான சொற்களைக் கண்டறிதல்
- கண்டறிந்த சொற்களைத் தங்கள் குறிப்பேட்டில் எழுதி வைக்கச் செய்தல்
- சரியான சொற்கள் இல்லையென்றால் மீண்டும் வாய்ப்புகள் கொடுத்தல்
- நீண்ட நேரம் ஆகிறது என்றால் மேற்குறிப்பிட்ட சொற்கள் எழுதிய சார்ட் தொங்கவிடுதல்
- குழந்தைகள் பார்த்துச் சொற்களைச் சேர்த்து எழுதுதல்
- இதே போன்று நமது பாடப்பகுதியிலுள்ள வேறு சொற்களைக் கண்டறிந்து எழுதச் செய்தல்
- குறிப்பேட்டில் பதிவு செய்து வெளியிடுதல்
  *(விழாக்காலம், தொல்லையில்லை, நல்லாட்சி, அறிவிற்சிறந்த, வானுலகு)*

## தும்பி வா வாவோ

ஆசிரியர் குழந்தைகளுக்கு ஓணக் கதையைக் கூறுதல்

ஓணத்தன்று நடைபெறும் விளையாட்டுகளையும், நிகழ்ச்சிகளையும் காணொளிக் காட்சி மூலம் காண்பித்தல்

குழந்தைகளிடம் கேள்விகள் கேட்டல்

என்னென்ன விளையாட்டுகள் இருந்தன?

என்னென்ன நடனங்கள் இருந்தன?

பதிவு செய்தல்

மீண்டும் ஒருமுறை காண்பித்தல்

ஆசிரியர் ஓணவிளையாட்டுகள், நடனங்கள் இவற்றின் பெயர் எழுதிய சார்ட்டைத் தொங்கவிடுதல்

அதில் தும்பி துள்ளல் நடனமும் சேர்த்தல்

சார்ட்டில் உள்ள நடனத்தின் பெயர்களை அறிமுகம் செய்தல்

## செயல்பாடுகள்

**பாடப்பகுதியை வாசித்துக் கருத்தைக் கூறுங்கள்**

"தும்பி வா வாவோ" என்ற நடனப் பகுதியை வாசித்தல்,. மீண்டும் மீண்டும் வாசிக்க வாய்ப்புகள் கொடுத்தல்.

கருத்துகளைக் கூறச் செய்தல்

கூறிய கருத்துகளைப் பிறர் மதிப்பீடு செய்தல்

அனைத்துக் கருத்துகளும் இடம் பெற்றுள்ளன என்பதை ஆசிரியர் உறுதி செய்தல்

தேவையான இடங்களில் ஆசிரியர் உதவி செய்தல்

**தும்பி துள்ளல் விளையாட்டின் சிறப்பம்சங்களை எழுதுங்கள்**

பாடப்பகுதியை நன்றாக வாசிக்கச் செய்தல்

வாசித்துக் கருத்துகளைக் கூறச் செய்தல்

கூடுதல் சிறப்புகளை அறிந்துகொள்ள சில கேள்விகள் கேட்டல்

தும்பி துள்ளல் எந்த விழாவின் ஒரு பகுதியாக உள்ளது?

இது எவ்வகையான விளையாட்டு?

இவ்விளையாட்டு யாரால் நிகழ்த்தப்படுகிறது?

தும்பி என்று அறியப்பட காரணம் என்ன?

தும்பியைச் சுற்றி ஆரவாரம் செய்பவர்கள் யார்?

பாடலின் வேகம் அதிகரிக்க தும்பி என்ன செய்வாள்?

இவ்வாறு ஒவ்வொரு கேள்விகள் கேட்கும் போதும் குழந்தைகள் பாடப்பகுதியை வாசித்துப் பதில் கூறுவர். கூறிய பதிலை ஒவ்வொன்றாக ஆசிரியர் சார்ட் செய்தல்.

- அவற்றைத் தனி தனியாக வாசிக்கச் செய்தல்
- பின்பு தனது குறிப்பேட்டில் பதிவு செய்தல்

- தும்பி துள்ளல் ஓணக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதி
- இது ஒரு வேடிக்கையான விளையாட்டு
- இது பெண்களால் நிகழ்த்தப்படுகிறது
- பெண், தும்பை இலைகளை வைத்திருப்பதால் தும்பி என்று அறியப்படுவாள்
- பாடகர்கள், நடனக் கலைஞர்கள் ஆரவாரம் செய்வர்
- பாடலின் வேகம் அதிகரிக்க பெண்தும்பி ஆடத் தொடங்குகிறாள்.

**தும்பி துள்ளல் விளையாட்டை நடித்துக் காண்பியுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- ஆசிரியர் பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்
- நடனப் பகுதியின் கருத்தைப் புரிந்து கொள்ளுதல்
- கதாபாத்திரங்களை மாணவர்களே தேர்ந்தெடுத்தல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- நடித்துக் காண்பித்தல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- மேம்படுத்தி வகுப்பில் வெளியிடுதல்
- நன்றாக நடனமாடிய குழுவைப் பாராட்டுதல்
- தும்பி துள்ளல் நடனத்தின் காணொளிக் காட்சியைக் காண்பித்து உரையாடுதல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- குழு நடனத்தில் அனைவரும் பங்குபெற்றனர்
- கருத்து வெளிப்படும்படி நடனம் அமைந்தது
- கதாபாத்திரமும் நடனமும் பொருத்தமாக அமைந்தது

**கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியை வாசித்துக் கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

செயல்பாட்டுப் பகுதியில் மாணவர்களைக் குழுவாக்குதல்

கொடுத்திருக்கும் உரைநடைப் பகுதியை நான்கோ ஐந்தோ முறை வாசிக்கச் செய்தல்

பின்பு கேள்விகளுக்குப் பதில் கண்டறிந்து எழுதுதல்

எழுதியவற்றைக் குழுவில் வாசித்தல்

பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்

மேம்படுத்துதல்/வெளியிடுதல்

ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்

ஆசிரியர் வெளியீடு பயன்படுத்துதல்

குழந்தைகள் மேம்படுத்துதல்

குறிப்பேட்டில் எழுதுதல்

- கிராமங்களில் பிரபலமானது
- திருவாதிரை நடனம்
- தும்பை இலை
- பாடலின் வேகம் அதிகரிக்கும் போது
- பாடகர்கள் மற்றும் நடனக் கலைஞர்கள்

## சிரிக்கும் மத்தாப்பு

### செயல்பாடுகள்

திருவிழாக்களின் பெயர்களைக் கூறச் செய்தல்

சிறு விடைக்குறிப்பு கொடுத்து எந்தப் பண்டிகை என்று கண்டறியச் செய்தல்

(1) புத்தாடை (2) எண்ணெய்க் குளியல் (3) பலகாரம் (4) பட்டாசு (குழுவுக்கு ஒருமுறை மட்டுமே பதில் கூற வாய்ப்பளித்தல்)

தீபாவளி என்ற பதில் வரும் வரை கேட்டல்

பதில் வந்தவுடன் நமது பாடப்பகுதியில் உள்ள பாடலை வாசிப்போம் எனக் கூறிப் பாடப்பகுதிக்குள் நுழைதல்

**பாடலுக்கு மெட்டமையுங்கள் / பாடுங்கள்**

- குழந்தைகள் பாடப்பகுதியை நன்கு வாசித்தல்
- தனிநபராக பாடலைப் பாடுதல்
- ஆசிரியர் ஒரு முறை பாடிக்காட்டுதல்
- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவாக மெட்டமைத்துப் பாடுதல்
- பிற குழுக்கள் மதிப்பீடு செய்தல்
- ஆசிரியர் புதிய மெட்டமைத்துப் பாடுதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- குழந்தைகள் அனைவரும் பங்கு பெற்றுள்ளனர்
- தனிநபராகப் பாடிக்காட்டினர்
- குழுக்கள் சிறந்த மெட்டமைத்துப் பாடினர்

**பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு கூறுங்கள்**

- கொடுக்கப்பட்டுள்ள கவிதையினை வாசிக்கச் செய்தல்
- கவிதையின் தலைப்பை வாசித்தல்
- அதே போன்று கவிதைக்கு வேறு தலைப்புகள் கூறச் செய்தல்
- தனி நபராகவோ குழுவாகவோ கூறட்டும்
- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்
- ஒவ்வொருவராக வாசிக்கச் செய்து சிறந்த தலைப்புகளைக் கலந்துரையாடித் தேர்வு செய்தல்

**ஒரே ஓசையுடைய சொற்களைப் பாடலில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்**

- ஆசிரியர் கவிதையை இரண்டு மூன்று முறை வாசித்தல்
- பின்பு ஒரே ஓசையுடைய சொற்கள் இரண்டைக் கூறுதல் (வந்தாச்சு, எழுந்தாச்சு)
- தொடர்ந்து குழந்தைகள் கண்டறிந்து எழுதுதல்
- வகுப்பில் வெளியிடுதல்
- ஆசிரியர் கரும்பலகையில் பதிவு செய்தல்
- குழந்தைகள் விடுபட்டவற்றை எழுதுதல்
- ஆசிரியர் உதவி செய்தல்
- மேம்படுத்தி எழுதுதல்

| | |
|---|---|
| ◆ வந்தாச்சு | ◆ சுட்டாச்சு |
| ◆ எழுந்தாச்சு | ◆ தின்னாச்சு |
| ◆ குளிச்சாச்சு | ◆ போயாச்சு |
| ◆ போட்டாச்சு | ◆ குப்பையாச்சு |
| ◆ கேட்டாச்சு | ◆ சேர்ந்தாச்சு |
| ◆ தந்தாச்சு | |

**தீபாவளியன்று நாம் செய்யும் செயல்களைப் பாடலில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்**

- செய்யக்கூடிய செயல்கள் தொடர்பான படங்களை ஆசிரியர் திரட்டி வைத்தல்
- படங்களை ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுத்தல்
- படத்தின் அடிப்படையில் குழுவாக்குதல்
- படத்தைப் பார்த்துக் கருத்தைப் புரிந்து கூறுதல்

- அவற்றை ஆசிரியர் சார்ட்டில் எழுதுதல்
- பின் அருகில் உள்ள குழுவினரிடம் கேட்டுச் செயல்களை எழுதுதல்
- செயல்களை எழுதிய பின்பு குழுவில் கலந்துரையாடி வரிசைப்படுத்துதல்
- வகுப்பில் கூறுதல்
- ஆசிரியர் குழுவினர் கூறியதைச் சார்ட் செய்தல்
- பாடப்பகுதியுடன் ஒப்பீடு செய்தல்
- சரியாக எழுதியக் குழுவைப் பாராட்டி மற்றக் குழுவை மேம்படுத்துதல்.
- வரிசையில் மாற்றம் இருந்தால் ஆசிரியர் வெளியீடு பயன்படுத்தி மேம்படுத்துதல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- படங்களைப் பார்த்துச் செயலைக் கண்டறிந்தனர்
- பாடப்பகுதியுடன் ஒப்பீடு செய்து செயலை வரிசைப்படுத்தினர்
- செயல்கள் சரியாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை இணைத்து "உம்" சேர்த்து எழுதுங்கள்**

- செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டை இரண்டோ மூன்றோ முறை வாசிக்கச் செய்தல்
- 'உம்' சேர்த்து இணைக்கப்பட்டுள்ளதைப் புரிந்து கொள்ளுதல்
- பின்பு கீழே கொடுத்திருக்கும் செயல்பாட்டிலுள்ள தொடர்களை வாசிக்கச் செய்தல்
- தங்களுக்குப் புரிந்த வகையில் தனித்தனியே தொடர்களை இணைத்தல்
- வகுப்பில் வெளியிடுதல்
- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- குழுவில் மேம்படுத்தி எழுதுதல்
- வகுப்பில் வெளியிடுதல்
- பிற குழுக்கள் மதிப்பிடுதல்
- ஆசிரியர் படைப்பைப் பார்த்து மேம்படுத்துதல்
- குறிப்பேட்டில் எழுதுதல்

- தீபாவளியும் பொங்கலும் நமது பண்டிகைகள்
- தீபாவளிக்கு இனிப்பும் புத்தாடையும் கிடைத்தன
- தங்கையும் அக்காவும் தீபம் ஏற்றினர்
- தம்பியும் அண்ணனும் எண்ணெய் தேய்த்துக் குளித்தனர்

**படம் வரைந்து நிறம் கொடுத்து மகிழுங்கள்**

- தீபாவளி தொடர்பான படங்களைத் தேர்வு செய்தோ, வரைந்தோ கொடுத்து நிறம் கொடுக்கச் செய்தல்.
- அனைவரின் பங்களிப்பை உறுதி செய்தல்
- சிறந்த படைப்பைப் பாராட்டுதல்
- படைப்புத் தொகுப்பில் சேர்த்தல்

## யாருக்குத் தீபாவளி

### செயல்பாடுகள்

**பாடப்பகுதியை வாசியுங்கள் கருத்துகளைக் கூறுங்கள்**

ஆசிரியர் தீபாவளியைப் பற்றிய கதையைக் கூறுதல்

மாணவர்களுக்கு அது மீண்டும் நினைவூட்டுவது போன்று இருக்கும்

பாடப்பகுதியிலுள்ள கதையைச் சிறு சிறு பகுதியாக வாசித்து விளக்கம் கூறுதல்

முழுக்கதையையும் வாசிக்க வாய்ப்பளித்தல்

கதையில் வரும் பெயர்களைக் கூறச் செய்தல்

கதை நிகழ்வைக் கூறச் செய்தல்

ஆசிரியர் ஒருங்கிணைத்தல்

கதையை முழுமையாகக் கூறச் செய்தல்

கதையின் கருத்தைக் கூறச் செய்தல்

ஆசிரியர் உதவி செய்தல்

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

- கதையை நன்கு வாசித்துள்ளனர்
- கதை நிகழ்வைக் கூறினர்
- கதையின் கருத்தைக் கூறினர்

**பல்வேறு விழாக்கள் குறித்துச் சிறுகுறிப்புகளுடன் ஒரு படத் தொகுப்பு உருவாக்குக.**

- திருவிழாக்கள் தொடர்பான படங்களைத் திரட்டி வரச்செய்தல்
- குழந்தைகள் திருவிழாக்களின் அடிப்படையில் குழுவாகுதல் (ஏற்கனவே பண்டிகைகளைப் பற்றிப் படித்திருப்பீர்கள் அல்லவா?)
- படங்களை வகுப்பில் காட்சிப் படுத்துதல்
- குழுவில் கலந்துரையாடுதல்
- ஒவ்வொரு விழாவைக் குறித்தும் சிறு குறிப்பு எழுதுதல்
- வகுப்பில் வெளியிடுதல்
- எழுதி வெளியிட்டதை ஆசிரியர் சார்ட் செய்தல்
- குழந்தைகளிடம் உள்ள படங்களைப் பயன்படுத்தி தொகுப்புகள் உருவாக்கி வெளியிடுதல்
- படைப்புத் தொகுப்பில் சேர்த்தல்

**மதிப்பீட்டுக் குறிப்புகள்**

- படங்கள் வெட்டிக் கொண்டு வந்துள்ளனர்
- திருவிழா குறித்துச் சிறு குறிப்பு எழுதியுள்ளனர்
- படத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது

**தீபாவளி வாழ்த்து அட்டை தயார் செய்து நண்பனுக்கு அனுப்புங்கள்**

- வாழ்த்துகள் என்னென்ன வகையில் உள்ளன? கலந்துரையாடுதல்
- பட்டியல் தயாரித்தல்
- "தமிழர் திருநாள்" என்ற தலைப்பில் செயல்பாடு 5–இல் உள்ள வாழ்த்து அட்டை தயார் செய்யும் செயல் வரிசையைப் பின்பற்றவும்.
- வாழ்த்து அட்டை தயார் செய்து வெளியிடுதல்
- படைப்புத் தொகுப்பில் சேர்த்தல்
- வாழ்த்து அட்டை மாதிரியைப் பார்க்கவும்

**கீழே கொடுத்திருக்கும் கட்டங்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி பண்டிகைகளின் பெயர்களை எழுதுங்கள்.**

- குழந்தைகளைக் குழுவாக்குதல்
- பண்டிகைகளின் பெயர்களை நினைவூட்டுவதற்குப் பெயர்களைக் கூறச் செய்தல்

- கட்டங்களில் உள்ள எழுத்துகளை வாசிக்கச் செய்தல்
- கட்டங்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி பண்டிகைகளின் பெயர்களை எழுதுதல்
- வெளியிடுதல், மேம்படுத்துதல், பதிவு செய்தல்

தீபாவளி
பொங்கல்
கிறிஸ்துமஸ்
ரம்சான்
பக்ரீத்
ஓணம்
ஈஸ்டர்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைநடையை வாசித்துச் சரியான இடத்தில் நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்துங்கள்**

- பாடப்பகுதியில் செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பகுதியைச் சார்ட்டில் நிறுத்தற் குறியீடு பயன்படுத்தாமல் எழுதித் தொங்கவிடுதல்.
- ஆசிரியர் சத்தமாக நிறுத்தாமல் இரண்டு, மூன்று முறை வாசித்தல்
- குழந்தைகளை வாசிக்கச் செய்தல்
- ஒவ்வொரு குறியீட்டையும் தனித்தனியாகப் பயன்படுத்தி வாசித்தல்
- முதலில் முற்றுப்புள்ளியை மட்டும் நிறுத்தி வாசித்து மற்றப் பகுதியை விரைவாக வாசித்தல்.
- காற்புள்ளி எங்கு வருகிறதோ அந்த இடத்தில் சொல்லி வாசித்தல் (யானை வெடி, சீன வெடி, வானவெடி)
- கேள்விக்குறி பயன்படுத்தி வாசித்தல் (பணக்கார வாழ்வைச் சொல்ல வேண்டுமா?)
- ஆச்சரியக்குறி பயன்படுத்துதல் (!)
- மேற்கோள் பயன்படுத்துதல் ("   ")
- ஒவ்வொரு குறியீடு பயன்படுத்தும் போதும் சார்ட்டில் எழுதிக் காண்பிக்க வேண்டும். மாணவர்கள் எழுதுதல்
- மாணவர்கள் பாடப்பகுதியில் பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.
- தொடர் செயல்பாடாக வேறு உரைநடை பகுதிகள் கொடுத்தல்.

## அலகு மதிப்பீடு

1. பொங்கல் பண்டிகை கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்துவோம்
   - மாக்கோலமிடுதல்
   - வீட்டைச் சுத்தம் செய்து வண்ணம் பூசுதல்
   - பானையில் பொங்கல் வைத்தல்
   - வீட்டின் முன் கரும்பு, மஞ்சள், கிழங்குகள், வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து விளக்கேற்றுவர்
   - வீட்டின் முற்றத்தில் புதுப்பானை, புது அடுப்பு வைப்பார்கள்
   - பொங்கல் பொங்கும்போது பொங்கலோ பொங்கல் எனக் கூறி மகிழ்வார்கள்

2. முதல் எழுத்தை மாற்றிச் சொற்கள் உருவாக்குங்கள்

   உள்ளம், ________________, ________________, ________________,

   ஒணம், ________________, ________________, ________________,

   கலை, ________________, ________________, ________________,

   தும்பி , ________________, ________________, ________________,

3. வாழ்த்து அட்டை தயாரிக்கலாமா?

   பிறந்தநாள் கொண்டாடும் நண்பனுக்கு வாழ்த்து அட்டை தயாரிக்கலாமா?

4. அனுபவக் குறிப்பு தயாரித்தல்

   உங்கள் வீட்டில் கொண்டாடிய பொங்கல்/ தீபாவளிப்பண்டிகை குறித்து அனுபவக் குறிப்பு தயாரியுங்கள்

5. "மாட்டுப் பொங்கல்" குறிப்பு தயாரிப்போம்

   மாடுகள் நமக்குப் பால் தருகின்றன.

   மாடுகள் வயல் உழவு வேலைக்கு உதவுகின்றன.

   மாடுகள் சாணம் (சாணி) தருகின்றன.

   மாடுகள் வண்டி இழுக்க உதவுகின்றன.

6. 1. தமிழர் திருநாள் பண்டிகை ________________

   2. பொங்கல் பண்டிகை சிறப்பிப்பது ________________, ________________

   3. பொங்கல் பண்டிகை ________________ நாட்கள் கொண்டாடப்படுகிறது.

   4. ஓணப் பண்டிகை ________________ மாநிலத்தின் பண்டிகை ஆகும்.

   5. ஓணப் பண்டிகையின் நாட்களில் ________________ கோலம் போடுவார்கள்.